வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 24.04.2024 புதன்கிழமை இதழ் : 115 பக்கங்கள் : 12

# பெண்ணுக்கு போதை ஊசி செலுத்தி 10 பேர் கொண்ட கும்பல் வன்புணர்வு

## யாழ்ப்பாணத்தில் கொடூரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

**தனக்கு போதை ஊசி செலுத்தி 10 பேர் வரையான கும்பல் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியது. அத்துடன், தன்னை சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கியது என்று 34 வயதான பெண் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.**

நல்லூருக்கு அண்மித்த பிரதேசத்தை சேர்ந்த 34 வயது பெண்ணே இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த பெண் மனநல பிரச்னையால் பாதிக்கப்பட்டவர். இவரின், பெற்றோர் மரணமானதையடுத்து தனது மூத்த சகோதரியுடன் வடமராட்சியிலுள்ள காப்பகம் ஒன்றில் நீதிமன்ற உத்தரவின்படி தங்கவைக்கப்பட்டிருந்தார்.

இவரின் மூத்த சகோதரி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் உயிரிழந்தார். இதையடுத்து கடந்த ஜனவரி மாதம் பெண்ணின் சகோதரன் அவரை தனது வீட்டுக்கு அழைத்து சென்றிருந்தார்.

சகோதரனின் வீட்டில் வைத்தே தனக்கு இந்தக் கொடுமை இழைக்கப்பட்டதாகவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 10 வரையான ஆண்கள் தனக்கு ஊசி செலுத்தி, சித்திரவதைகள் செய்து வன் புணர்வுக்கு உள்ளாக்கினர் என்றும் பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளார்.

அவரின் உடலில் சிகரெட்களால் சுடப்பட்ட அடையாளங்கள், தாக்கப்பட்டதற்கான தளும்புகள், தாக்கப்பட்டு கை

11

# விஜயதாஸவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்!

## மகிந்த அமரவீர எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 24

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் உபதலைவர்களில் ஒருவரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷ பதில் தலைவராக நியமிக்கப்பட்டமை சட்டத்துக்கு புறம்பானது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பெயரை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்க மைத்திரிபால சிறிசேன அணி நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# பாராளுமன்ற விவாதத்துக்கு 4.5 கோடி ரூபாய் செலவாகும்

கொழும்பு, ஏப். 24

இன்று ஆரம்பமாகும் ஈஸ்டர் தாக்குதல் பற்றிய பாராளுமன்ற விவாதத்துக்கு நான்கரை கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இதன் மூலம் ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் யார் என்ற பதில் கிடைக்குமா என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

முன்னரும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் 11 நாட்கள் விவாதங்கள் நடந்துள்ளன. இதற்காக 13 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான பாராளுமன்ற விவாதம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி வெள்ளிக் கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற வுள்ளது.

இந்த விவாதத்துக்கான பிரேரணை எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஐ)

# நாள் சம்பளமாக 1,700 ரூபாய் தீர்மானிக்கும் கூட்டம் இன்று

கொழும்பு, ஏப். 24

நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பில் முடிவு எடுப்பதற்காக சம்பள நிர்ணய சபை இன்று புதன்கிழமை கூடுகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்படுகின்றது.

கடந்த 10 ஆம் திகதி சம்பள நிர்ணய சபை கூடிய போதும் முதலாளிமார் சம்மேளனமும், தோட்ட சேவையாளர் சங்கமும் அதில் பங்கேற்கவில்லை.

இந்நிலையிலேயே, 14 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டு சம்பள நிர்ணய சபை இன்று கூடுகின்றது. (ஐ)

# சஹ்ரானுடன் ஷங்கிரிலாவில் தங்கியோர் விவரம் மறைப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஏப். 24


ஈஸ்டர் தாக்குதலுக்கு முதல்நாள் ஷங்கிரிலா ஹோட்டலில் சஹ்ரான் ஹாசிம் தங்கியிருந்தார். அதேநேரம், 616, 623ஆம் இலக்க அறைகளில் தங்கியிருந்தோரின் விவரங்களை உயர்நீதிமன்றுக்கு தெரிவிக்காமல் ஹோட்டல் நிர்வாகம் மறைத்துள்ளது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள் ளது.

அத்துடன், 2019 ஏப்ரல் 21ஆம் திகதி தற்கொலை தாக்குதலில் ஈடுபட்ட சஹ்ரான்

11

# அரசியல் உதைபந்தாக கல்வியை மாற்றுவதற்கு இடமளிக்கக்கூடாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஏப். 24

கல்வியை அரசியல் உதைபந்தாக மாற்றிக் கொள்ளும் பட்சத்தில் நாடு தோல்வியை சந்திக்க நேரிடும். எனவே, தனிப்பட்ட நோக்கங்களை விடுத்து அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி நாட்டுக்கு பொருத்தமான கல்வி முறையை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம் என்று

11

# இன்று வருகிறார் ஈரான் ஜனாதிபதி 5 உடன்படிக்கைகள் கைச்சாத்தாகும்!

கொழும்பு, ஏப். 24

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இன்று புதன்கிழமை நாட்டுக்கு வருகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அழைப்பில் அவர் ஒரு நாள் பயணமாக இலங்கை வருகிறார். கடந்த 2008 ஏப்ரல் ஈரானின் அப்போதைய ஜனாதிபதி மஹ்மூட் அஹமதிநெஜாட் இலங்கை வந்த பின்னர் ஈரான் ஜனாதிபதி ஒருவர் இலங்கை வருவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

மகாவலி திட்டத்தின் பின்னர் நாட்டின் மிகப் பெரிய

11

# பகிரங்க விவாதத்துக்கு சஜித், அநுர உடன்பாடு!

கொழும்பு, ஏப். 24

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி) தலைவர் அநுரகுமார திஸநாயக்கவும் பகிரங்க விவாதத்துக்கு தயார் என்று அறிவித்துள்ளனர்.

மே 07, 09, 13, 14ஆம் திகதிகளில் ஒரு தினத்தில் விவாதத்தை நடத்துவதற்கு தாம் தயார் என்று அநுரகுமார அறிவித்துள்ளார்.

இதேநேரம், தேசிய மக்கள் சக்தியின் தலைவருடன் விவாதத்துக்கு தயார். விவாதத் திகதி இரு தரப்பும் பேசி முடிவு செய்யலாம் என்று நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கூறினார். (ஐ) (விரிவான செய்திகள் பக்கம் 5இல்)

# நீதிபதி இளஞ்செழியனுக்கு யாழ். மேல் நீதிமன்று அழைப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 24

நீதிபதி மா. இளஞ்செழியன்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவரின் மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பில் இன்று புதன்கிழமை நடக்கும் வழக்கில் சாட்சியமளிக்குமாறு யாழ். மேல் நீதிமன்றம் நீதிபதி இளஞ்செழியனுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த 2017 ஜூலை 22ஆம் திகதி அப்போதைய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தான் வழக்கமாகப் பயன் படுத்தும் நல்லூர் ஆலய பின்வீதி

11

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப். 24

புத்தாண்டு விடுமுறை நிறைவடைந்து இன்று முதல் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வுள்ளது.

அதேவேளை, இந்த வருடத்தின் பாடசாலை முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் இன்று ஆரம்பமாகி அடுத்த மாதம் 03 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் அடுத்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அத்தோடு, சாதாரண தர பரீட்சை மே மாதம் 06 முதல் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# இப்படியும் நடக்கிறது

அரசியல்வாதிகள் தாம் கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விடுவது ஒன்றும் எப்போதாவது நடக்கின்ற விடயமல்ல. அப்படி அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது தான் எப்போதாவது நடந்திருக்கின்றது. அரசியல்வாதி ஒருவர், கட்சி மாறுவதோ அல்லது கொள்கையை மாற்றிக்கொள்வதோ கவுண்டமணி பாசையில் சொல்வதானால், "அரசியலில் இது எல்லாம் சகஜமப்பா".

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களில் பலர் போட்டியிடுவதற்கு முன்னர், இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறைமையையே ஒழிக்கவேண்டும் என்று சொல்வார்கள். ஆனால், பதவிக்கு வந்த பின்னர் எப்படி அடுத்த தடவையும் வெற்றிபெறுவது என்பதிலேயே கவனம் செலுத்துவார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் முடிந்து ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கவலை வெளியிட்டிருக்கிறார். அவரது கவலை நியாயமானதுதான்.

தாக்குதலின் ஐந்தாவது ஆண்டு நிறைவு வைபவத்தில் பேசிய அவர், "உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் குறித்து சர்வதேச விசார ணைகளை முன்னெடுப்பதற்காக வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் யோசனையொன்றை கத்தோலிக்க திருச்சபை முன்வைக்கவுள்ளது." என்று தெரிவித்திருக்கிறார். அவர் இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை முன்னரும் அணுகியும் இருக்கிறார். நேரடியாக அங்கு சென்று ஐ.நா. மனித உரிமை ஆணையரையும் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்ததும் நமக்கு ஞாபகம் இருக்கிறது.

ஆனால், அவ்வாறு கோரிக்கை வைத்துவிட்டு தாயகம் திரும்பிய பின்னர் அவர், தாம் சர்வதேச விசாரணையை கோரவில்லை என்றும் உள்ளூரில் நடக்கும் விசாரணைகள், வெளிப்படைத் தன்மையுடன் நடக்கவேண்டும் என்பதே தமது கோரிக்கை என்றும் கூறியிருந்தமையும் நமக்கு ஞாபகமானவைதான்.

ஆனால், இப்போது அவர் மீண்டும் சர்வதேச விசாரணையை கோரவிருக்கிறார் என்று கூறியிருக்கிறார்.

அதுவல்ல, நாம் இன்று பேச வருவது,

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் முக்கிய இரண்டு கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் தாம் அடுத்து ஆட்சிக்கு வந்தால், இந்த விவகாரத்தை எவ்வாறு அணுகவிருக்கிறோம் என்பதை கர்தினாலுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருக்கின் றன. அதிலும் தேசிய ஐக்கிய மக்கள் சக்தியோ நாட்டிலுள்ள குற்றவியல் சட்டங்களின் கீழேயே இந்தக் குற்றவாளிகளுக்கு தண் டனை பெற்றுக்கொடுக்க இருப்பதாகவும் தெரிவித்திருந்தது.

ஆனால், கர்தினாலோ இவர்கள் இருவரும் சமர்ப்பித்துள்ள யோசனைகளில் தனக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். "பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்ற தனது வாய்மூல வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தவறியுள்ளார்" என்றும் அவர் தெரிவித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தத் தாக்குதலின் பின்னால், யார் இருப்பதாக பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டி வருகின்றனரோ, அவர் தனக்கு வழங்கிய வாய்மூல வாக்குறுதியையே நம்பியிருந்திருக்கிறார் என்றால் இனி ஆட்சிக்கு வரவேண்டும் என்று விரும்புகின்றவர்கள் கொடுத்த எழுத்துமூல வாக்குறுதியை அவர் நம்புவது பெரிய விசயமல்லத்தான்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றவேளை பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியாக உள்ளார். அவ்வேளை கொழும்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்றவேளை தனது கடமைகளை நிறைவேற்றாமல் வெறுமனே தகவல்களை கொண்டு செல்பவ ராக காணப்பட்டார் என உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அவர் தற்போது பொலிஸ்மா அதிபராக பதவி வகிக்கின்றார்" எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறியிருக்கும் அதேவேளை, இவ்வாறான சூழ்நிலையில் நீதியை எவராவது எதிர்பார்க்க முடியுமா என்றும் கேட்டிருக்கிறார்.

ஆனால், ஐம்பத்தி மூன்று வயதேயான தற்போதைய பொலிஸ்மா அதிபர், அடுத்த ஆட்சியிலும் அதே பதவியில்தானே தொடரப்போகின்றார். அவர் மூலம்தான் அடுத்த ஆட்சியும் நீதியை பெற்றுத்தரப்போகின்றது என்று கர்தினால் நம்புவது கோட்டாபயவை நம்பியதுபோலத்தானோ தெரியவில்லை.

முன்னரும் இதுபற்றி எழுதியிருக்கின்றேன். முள்ளிவாய்க்கால் அவலம் நடந்து முடிந்த பின்னர், அப்போது மன்னார் ஆயராக இருந்த இராயப்பு யோசப் ஆண்டகை, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று குரல்கொடுத்தபோது, அதனைக் கண்டுகொள்ளாத கர்தினால், அப்போதே தமிழ் ஆயர்களுடன் இணைந்து அந்த அநீதிக்கு நீதி வேண்டி போராடியிருந்தால், இன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்கின்றபோது அந்தக் குரல் இன்னும் வலிமையாக ஒலித்திருக்குமே.!

**- ஊர்க்குருவி.**

# ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினம் மருதானையில்!

## ஒரு இலட்சம் பேரின் பங்கேற்பரென எதிர்பார்ப்பு

கொழும்பு, ஏப். 24

ஐக்கிய தேசியக் கட்சியின் 2024 ஆம் ஆண்டு மே தின விழாவை மருதானையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திஸ்ஸமஹாராம தேர்தல் தொகுதியில் மே தினத்தை ஏற்பாடு செய்வது தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன தலைமையில் லுணுகம்வெஹர பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த வருடம் மருதானையில் ஒரு இலட்சம் பேரின் பங்கேற்புடன் மே தினம் கொண்டாடப்படும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கொண்டாட்டம் தொடர்பாக பிரதேச மட்டத்தில் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் திஸ்ஸமஹாராம தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து ஐ.தே.க முக்கியஸ்தர்களும், அத்தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.தே.க செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# போதைப்பொருட்களுடன் 720 பெண்கள் கைதாகினர்

கொழும்பு, ஏப். 24

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் 720 பெண்களும் 13 ஆண்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 19 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையான 11 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 152 கிராம் ஹெரோயின்,1,133 கிராம் ஐஸ்,379 கிராம் கஞ்சா,16 கிராம் ஹெரோயின் மற்றும் 389 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐந்து அரச நிறுவனங்களின் தலைவர்கள் கோப் குழுவுக்கு!

கொழும்பு, ஏப். 24

சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் உள்ளிட்ட 5 அரச நிறுவனங்களின் தலைவர்கள் இந்த வாரம் கோப் எனப்படும் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மஹாபொல உயர் கல்வி உதவித்தொகை நிதியம் ஆகிய நிறுவனங்களின் தலைவர்களே குறித்த குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நாளையும் , பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மஹாபொல உயர் கல்வி உதவித் தொகை நிதியம் ஆகியவற்றின் தலைவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதியும், சிறிலங்கன் விமானச் சேவை நிறுவனத்தின் தலைவர் எதிர்வரும் 26ஆம் திகதியும் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# ரயிலிலிருந்து தவறி வீழ்ந்து வெளிநாட்டுப் பெண் காயம்

கொழும்பு, ஏப். 24

மலையக ரயில் பாதையில் கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து வெளிநாட்டுப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் மொரிஷியஸ் நாட்டைச் சேர்ந்த 32 வயது பெண்ணாவார்.

இவர் பட்டிப்பொல மற்றும் ஒஹிய ஆகிய பகுதிகளுக்கு இடையில் ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து காயமடைந்துள்ள நிலையில், அம்புலன்ஸ் மூலம் தியத்தலாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் அப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வான் - டிப்பர் விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்

கொழும்பு, ஏப். 24

டிப்பர் - வான் - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மூவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் - குருணாகல் பிரதான வீதியின் கல்லடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

புத்தளத்தில் இருந்து ஆனமடுவ சென்ற டிப்பரை வான் மோதியது. வானின் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் வானை மோதி விபத்து இடம்பெற்றது.

விபத்தில் வானின் சாரதி உட்பட இருவரும், மோட்டார் சைக்கிளில் வந்தவரும் காயமடைந்தனர். இவர்கள் புத்தளம் ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)

Eelanadu ஈழநாடு
24.04.2024 புதன்கிழமை
குரோதி வருடம், சித்திரை 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## தமிழ் அரசுக் கட்சியின் தலைமை

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்ந்தும் நெருக்கடியிலேயே இருக்கின்றது. இந்த நெருக்கடி நிலைமையானது கட்சியின் மக்கள் செல்வாக்கை சிதைவடையச் செய்யும் அதேவேளை, கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களையும் உற்சாக மிழக்கச் செய்யக்கூடியது. ஏனெனில், ஒரு தலைமைத்துத்தின் கீழ் கட்சியை ஒன்றுபடுத்துவதில் தொடர்ந்தும் இழுபறிநிலையே காணப்படுகின்றது. கட்சியின் உண்மையான தலைவர் சிவஞானம் சிறீதரன்தான் - அவரையே கட்சியின் பெரும்பான்மை புதிய தலைவராகத் தெரிவு செய்திருந்தது. ஜனநாயக நெறிமுறைக்கு இணங்கி செல்வதானால் அதனை ஏற்றுக்கொண்டு பயணிப்பதே சரியானது. கட்சியின் யாப்புக்கு அமைவாக விடயங்கள் நடைபெறவில்லை என்பதெல்லாம் கட்சியின் உள்பிரச்னை. அதனை உள்ளுக்குள் தீர்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், விடயங்கள் இந்த அடிப்படையில் கையாளப்படவில்லை.

கட்சிக்குள் இவ்வாறான நெருக்கடி ஏற்பட்டபோது “ஈழநாடு” ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தது. அதாவது, கட்சிக்குள் இரு அணிகள் உருவாகிவிட்டன. எனவே, எதிர்கால தீர்மானங்களில் இரு அணிகளின் செல்வாக்கு இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவாறு சிக்கல்களை ஏற்படுத்தும். அதனை இப்போது காணமுடிகின்றது. தமிழ்த் தேசிய அடிப்படையில் சிந்திக்கும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் பலரும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர். ஆனால், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டிலிருந்து விலகி செல்வதான குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்கின்றனர்.

இவ்வாறான நெருக்கடிக்கு கட்சி ஒருபோதும் ஆட்பட்டுவிடக்கூடாது என்னும் அடிப்படையில்தான் கட்சியின் ஸ்தாபகர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைவர் தெரிவில் போட்டியை உட்புக ஒருபோதுமே அனுமதிக்கவில்லை. அவர் ஜனநாயகம் தெரியாததால் அதனை செய்யவில்லை என்பதல்ல. மாறாக, ஜனநாயகம் என்பது கட்சியின் அடிப்படையை சிதைக்கும் காரணியாக இருந்துவிடக் கூடாதென்பதில் அவர் உறுதியாக இருந்திருக்கின்றார். ஆனால், செல்வநாயகத்துக்குத் தெரியாத ஜனநாயகம் தங்களுக்குத் தெரியுமென்று சிலர் எண்ணிக் கொண்டதன் விளைவே இன்று தமிழ் அரசுக் கட்சியின் உள் பிரச்னை தெருவெங்கும் பரிகசிக்கப்படுகின்றது.

தமிழ் அரசுக் கட்சிக்கான தலைவர் தெரிவில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சிறீதரன் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றார். ஆனால், தலைவர் தெரிவில் தோல்வியடைந்த சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்கின்றார். இதன் ஊடாக மீண்டும் ஒரு பலப்பரீட்சை கட்சிக்குள் எட்டிப்பார்கின்றது அல்லது அவ்வாறானதொரு பலப்பரீட்சை திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகின்றது. இதனை எதிர்கொள்ளும் ஆற்றலுடன் மாவை சேனாதிராசா இருக்கின்றாரா? ஆகக்குறைந்தது மாவை சேனாதிராசா தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுடன் பயணிப்பது தொடர்பில் சில முக்கிய தீர்மானங்களுக்கு வரவேண்டியது காலத்தின் கட்டாயம்.

செல்வநாயகம் தலைமையிலான இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாரம்பரியம் முற்றிலும் மாறுபட்டது. செல்வநாயகம் பதவி நிலையிலிருந்து கட்சியின் எதிர்காலத்தை மதிப்பிட்ட ஒரு மனிதரல்ல. மாறாக, புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அரசியலை முன்னெடுக்க வேண்டுமென்று எண்ணியபோது சிறிதும் தடுமாற்றமின்றி தனது கொள்கையுடன் முரண்பட்டுநின்ற ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்றவர். அவ்வாறான ஒருவரின் மரபில் வந்த கட்சியை சேர்ந்தவர்கள் பதவி நிலையை முன்வைத்துத் தங்களுக்குள் மோதிக் கொள்வது நிச்சயம் கட்சியின் தரத்தை பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. செல்வநாயகம் போன்று சிந்திக்கக்கூடிய ஒருவராக மாவை சேனாதிராசா மாறுவாரானால் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

# சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை ஏலம் விடுகிறார் முன்னாள் தலைவர்!

### மகிந்த அமரவீர சாடல்

கொழும்பு, ஏப். 24

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் கட்சியை ஏலம் விடுகிறார் என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் விவசாய அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் தனது பாதுகாப்பு, வழக்கு மற்றும் நிதித் தேவைகளுக்காக கட்சியை பயன்படுத்துகிறார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சியின் நிறைவேற்று சபையில் இணையும் தகுதி இல்லாததாலும் பதில் செயலாளர் சட்ட நடவடிக்கைகளை அவமதித்துள்ளமையால் இது குறித்து எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம் - என்று கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

(ஐ)

# சீனாவின் உயர்மட்ட குழுவினர் ஜே. வி. பியினரை சந்தித்தனர்!

கொழும்பு, ஏப் 24



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறைத் தலைவர் லியு ஜியான் சாவோ உள்ளிட்ட தூதுக் குழு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை இன்று சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த தூதுக்குழுவில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறைத் தலைவர் லியு ஜியான்சாவோ மற்றும் இலங்கையில் உள்ள சீனத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் சென் சியாங் யுவான் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப் பட்டுள்ளது.

மேலும், நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் தூதுக்குழுவுக்கு விளக்கியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், ஹரிணி அமரசூரிய மற்றும் கட்சியின் உறுப்பினர்களான சுனில் ஹதுன்னெத்தி, பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# ஜனாதிபதித் தேர்தலில் ரொஷான் போட்டியிடுவார்!

### தேசிய ஜனநாயக முன்னணி

கொழும்பு, ஏப். 24

பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக போட்டியிடுவார் என்று தேசிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.


பாராளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் தமது கட்சியின் வேட்பாளர்கள் முன்நிறுத்தப்படுவர் என்று அந்தக் கட்சியின் தலைவர் ருவன் மலிந்த கூறியுள்ளார்.

ஊழலுக்கும் வீண்விரயத்துக்கும் எதிரான பலர் எதிர்காலத்தில் தமது கட்சியில் இணையவுள்ளனர் என்றும் கூறினார்.

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக 2020இல் தெரிவான ரொஷான் ரணசிங்க, இராஜாங்க அமைச்சராக முதலில் பணியாற்றியதுடன், 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை தொடர்ந்து அமைக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக செயல்பட்டார். இலங்கை கிரிக்கெட்டுக்குள் அரசியல் செல்வாக்கு செலுத்துவதாகக் கூறி அவர் தனது பதவியை இராஜிநாமா செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# தமிழகம் வந்த இலங்கை அகதிகள் எண்ணிக்கை 300ஐ கடந்தது!

இராமேஸ்வரம், ஏப். 24


2022 மார்ச்சிலிருந்து தமிழகத்துக்கு வந்த இலங்கை அகதிகளின் எண்ணிக்கை 301ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாக தனுஷ்கோடிக்கு அகதிகளாக வரும் இலங்கை தமிழர்கள் கைது செய்யப்படாமல் மனிதாபிமானஅடிப்படையில் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்படுகின்றனர். நேற்று முன்தினம் மட்டக்களப்பை சேர்ந்த மூவர் படகு மூலம் தமிழகம் வந்தனர்.

தகவலறிந்த மண்டபம் கடல் கண்காணிப்பு பொலிஸார் அவர்களை மீட்டு விசாரணைக்குப் பின்னர், மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ஒப்படைத்தனர்.

இதன்மூலம், 2022 மார்ச் மாதத்திலிருந்து தமிழகத்துக்கு வந்த இலங்கை அகதிகளின் எண்ணிக்கை 301 ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## ஆற்றில் இறங்கினார் கள்ளழகர் பல இலட்சம் மக்கள் தரிசனம்!



மதுரை, ஏப். 24

"கோவிந்தா கோவிந்தா" முழக்கம் விண்ணைமுட்ட பக்தர்கள் புடைசூழ தங்கக் குதிரை வாகனத்தில், பச்சைப் பட்டுடுத்தி வைகை ஆற்றில் இறங்கினார் கள்ளழகர்.

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை அழகர் கோவில் திருவிழாவில், நேற்று காலை 6 மணி அளவில் மதுரை - ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் எழுந்தருளினார் கள்ளழகர். இந்த நிகழ்வில் பல இலட்சம் மக்கள் கள்ளழகரை தரிசித்து வழிபட்டனர்.

சித்திரா பௌர்ணமி தினமான நேற்று ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் எழுந்தருளினார் கள்ளழகர். முன்னதாக, வழிநெடுகிலும் பல்வேறு மண்டகப்படிகளில் எழுந்தருளினார் என்பது குறிப்பிடத்தக்கது. பக்தர்கள் ஆடிப்பாடி அழகரை வழிபட்டனர். வரும் 27ஆம் திகதி அன்று கள்ளழகர் அழகர் கோவிலுக்கு திரும்புகிறார். (ஐ)

## மத துவேச கருத்தை தவிருங்கள்!

### எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஏப். 24

"அரசியல் கட்சித் தலைவர்கள் மத துவேச கருத்துகளை தேர்தலுக்காக பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்" என்று பிரதமர் மோடியின் ராஜஸ்தான் பொதுக்கூட்ட பேச்சு தொடர்பாக அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக எடப்பாடி பழனிசாமி விடுத்துள்ள அறிக்கையில்,

இந்தியா ஒரு மத சார்பற்ற நாடாகும். வாக்கு வங்கி அரசியலுக்காக அரசியல் கட்சித் தலைவர்களும், நாட்டின் உயர் ஆட்சிப் பதவியில் உள்ள பிரதமரும் இதுபோன்ற சர்ச்சைக்குரிய கருத்தை வெளிப்படுத்துவது இந்திய இறையாண்மைக்கு உகந்ததல்ல. அரசியல் கட்சித் தலைவர்களும், ஆட்சி அதிகாரத்தில் உயர் பதவியில் உள்ளவர்களும் இதுபோன்ற கருத்துகளைத் தவிர்ப்பது நாட்டின் நலனுக்கும், மத நல்லிணக்கத்துக்கும் நல்லது.

ராஜஸ்தான் கூட்டத்தில் முஸ்லிம்களை ஊடுருவல்காரர்கள் என்றும் காங்கிரஸ் நாட்டு மக்களின் சொத்துகளை அவர்களிடம் பறித்துக் கொடுக்கிறது என்றும் பொருள்படும்படியாக பிரதமர் மோடி பேசியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தோல்வி பயத்தால் மோடி மத உணர்வை தூண்டுகிறார்

### முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஏப். 24

"தோல்வி பயத்தில் மத உணர்வுகளை தூண்டிவிடுகிறார்" என்று பிரதமர் மோடியின் பேச்சிற்கு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் நரேந்திர மோடியின் பேச்சு மிகவும் மோசமானது மற்றும் வருந்தத்தக்கது. இந்த வெறுப்பு பேச்சை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. தனது தோல்விகளுக்கு எதிரான பொதுமக்களின் கோபத்துக்கு அஞ்சி, மத உணர்வுகளைத் தூண்டிவிடுகிறார். வெறுப்பும் பாகுபாடும்தான் மோடியின் உண்மையான உத்தரவாதம் - என்று தனது சமூக வலைத்தில் பதிவிட்டுள்ளார்.

# வெப்பத் தணிப்பு திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும்

### அன்புமணி ராமதாஸ்



சென்னை, ஏப். 24

காலநிலை மாற்றம் காரணமாக தமிழ்நாட்டில் வெப்பத்தின் கடுமை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இனி வருங்காலங்களில் அதைக் கட்டுப்படுத்தும் வகையில் வெப்பத் தணிப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அன்புமணி ராமதாஸ் எழுதிய கடிதத்தில்,

"தமிழ்நாட்டை அதிவெப்பத்தின் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு போர்க்கால வேகத்தில் தொடங்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு தமிழக நகரங்களுக்கும் ஊரகப் பகுதிகளுக்கும் வெப்பத் தணிப்பு செயல் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் - என்று கூறியுள்ளார்.

---

ஏப்ரல் - 24 புதன்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 11
நல்ல நேரம் : 09.30 - 11.30
ராகு காலம் : 12.30 - 01.30
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சக ஊழியர்களை விட அதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும். அமோகமான நாள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.மேலதிகாரிகளின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். அலுவலக மேலதிகாரிகளின் உதவி தேவைப்படும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**துலாம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மேலதிகாரிகளிடம் கவனமாக செயல்படவும்.சிறப்பான நாள்.

**தனுசு**
உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும்.

**மகரம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
மூத்த சகோதரர்கள் வகையில் உதவிகள் உண்டு. சக ஊழியர்களின் ஆதரவு பாராட்டும் கிட்டும். மேலதிகாரிகளிடம் சிறந்த முறையில் நடந்து கொள்ளவும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

# சஜித் பிரேமதாசவுடன் விவாதத்துக்குத் தயார்!

## திகதி அறிவித்தது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 24

**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையில் நடைபெறவுள்ள விவாதத்திற்கான திகதிகளை தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.**

அதற்கமைய, எதிர்வரும் மே மாதம் 7, 9, 13 மற்றும் 14ஆம் திகதிகளில் விவாதத்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிற்கு தேசிய மக்கள் சக்தி கடிதமொன்றை அனுப்பியுள் ளது.

திகதியை தெரிவு செய்ததன் பின்னர் நேரம், விவாதத்திற்கான காலப்பகுதி, இடம் மற்றும் விவாதம் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி என்பன தொடர்பில் தீர்மானிக்க முடியும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், ஏதேனும் ஒரு வகையில் விவாதத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி இணங்கவில்லை என்றால், அது தொடர்பாக உடனடியாக அறிவிக்குமாறு குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# நாட்டின் புலனாய்வு அமைப்புகள் சுயாதீனமாக செயல்படவேண்டும்!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 24

பொலிஸாரும் புலனாய்வு அமைப்புகளும் அரசியலில் கைக்கூலிகளாக இருக்கக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் இடம்பெற்ற விசேட நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ், குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் ஏனைய புலனாய்வு திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக மாறுவது பிரச்னைக்குரிய விடயம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல் சேகரிப்பு நிறுத்தப்பட்டதாக சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மேலும் இவ்வாறானதொரு சூழ்நிலையில், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸ், புலனாய்வு அமைப்புகள் மற்றும் ஏனைய புலனாய்வு அதிகாரிகள் சுயாதீனமாக செயல்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# விவாதத்துக்கு நாமும் தயார்!

## அனுரவுக்கு சஜித் பதில்



கொழும்பு, ஏப். 24

மே மாதத்தில் தேசிய மக்கள் சக்தியுடனான விவாதங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை, வீரகெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடிதம் எழுத வேண்டிய தேவையில்லை. மே மாதம் இரண்டு விவாதங்களுக்கும் நாங்கள் தயார்.

நளின் பண்டார பொருளாதாரத் துறையில் விவாதத்திற்கு வருமாறு சகோதரர்களுக்கு சவால் விடுத்தபோது, பொருளாதார நிபுணர்களின் விவாதத்தில் இருந்து தப்பிய சகோதரர்கள் மீண்டும் தலைவர்களுக்கு இடையில் விவாதத்திற்கு வருமாறு சவால் விடுத்தனர்.

பொருளாதார வல்லுநர்கள் மற்றும் தலைவர்களுக்கு இடையிலான இரண்டு விவாதங்களுக்கும் நாம் தயார்.

இதிலிருந்து தப்பி ஓடாமல், இந்த இரண்டு சவால்களையும் ஏற்றுக்கொள்ளுமாறும், கோழைகளாக தப்பித்து ஓடாது, விவாதத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

பொருளாதார வல்லுநர்கள் மத்தியிலான விவாதத்திற்கு முடியாது எனக் கூறுவது அவர்களின் பொருளாதார வல்லுநர்களால் நாட்டுக்கான சரியான பொருளாதார பார்வையை முன்வைக்க முடியாமையினாலா என்ற பிரச்னை எழுகிறது.

எனவே, கடிதம் அனுப்பாமல் மே மாதம் இரு விவாதங்களுக்கும் வாருங்கள். அதே போல் விவாதங்கள் நடத்துவது போலவே, வெறும் வாய்வீராப்பு காட்டாமல் மக்களுக்கு சேவை செய்து காட்டுங்கள்.

பிரயோக ரீதியான தலைவர்களே நாட்டுக்குத் தேவை. வீராப்பு பேச்சுக்களால், பொய்களால் மக்கள் சலிப்படைந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி பேச்சுக்கும், மக்கள் பணிக்கும் தயாராக இருப்பதால், அஞ்சாது விவாதத்துக்கு வருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்-என்றார். (அ)

# யாழ். திருமறை கலாமன்றத்தில் தனிநாயகம் நினைவுப் பேருரை

## தமிழ்நாடு பேராசிரியர் முனைவர் சின்னப்பன் ஆற்றினார்







யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நான்காவது நினைவுப் பேருரை அருட்தந்தை கலாநிதி அமிர்த ஜெயசேகரம் அடிகள் தலைமையில் நேற்று முன் தினம் மாலை யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் கல்விப் பணிகள் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றினார்.

நிகழ்வை யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா நெறிப்படுத்தினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தொடக்கவுரையையும் நெடுந்தீவு பிரதேச கலாசார உத்தியோகத்தர் அ. சிவஞானசீலன் ஆய்வுரையாளரை அறிமுகம் செய்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி ஆய்வுரை ஆற்றிய பேராசிரியர் கு. சின்னப்பனுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

மண்கும்பான் வெண்புரவி கலைஞர்களின் கும்மி நடனமும் இடம்பெற்றது. நிகழ்வில் அருட்தந்தையர்கள் கல்வி ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# போதைப்பொருளுடன் 5 பெண்கள் மசாஜ் நிலையத்தில் வைத்து கைது!

கொழும்பு, ஏப். 24

இராஜகிரியவிலுள்ள மசாஜ் நிலையம் ஒன்றில் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஐந்து பெண்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு பெண்கள் கட்டானைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் மோதரை, பொரளை, இராஜகிரிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் நீண்ட காலமாக மசாஜ் நிலையத்திற்கு வருபவர்களை இலக்கு வைத்து ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்து வந்தமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது . (அ)

# ஈரான் - இஸ்ரேல் மோதல் இலங்கைக்கு எச்சரிக்கை!



கொழும்பு, ஏப். 24

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல் தொடருமானால், இலங்கையின் பொருளாதாரம் பாரிய ஆபத்துகளை எதிர்கொள்ள நேரிடும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக் கோரள எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருளை இறக்குமதி செய்வதில் இலங்கை ஈரானுடன் நேரடித் தொடர்புகளை கொண்டிருக்காவிட்டாலும், இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்யும் நாடுகளுக்கு ஈரானே பிரதான எரிபொருள் வழங்குநராக இருப்பதாக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ஈரானுக்கு சுமார் 80 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன், ஈரானில் இருந்து 10 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை இலங்கை இறக்குமதி செய்கிறது.

இதன்படி, இலங்கைக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஈரான் 61 ஆவது இடத்தை வகிக்கின்றது.

அதேநேரம், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல்கள் எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் எனவும், இந்த மோதல்கள் உலகப்போராக உருவாகும் அபாயம் காணப்படுவதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பேன்!

## பொன்சேகா கூறுகிறார்



**கொழும்பு, ஏப். 24**
**“எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இச்சம்பவம் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும்.” - என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் நடைபெற்று ஐந்தாண்டுகள் ஆகின்றன. இத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் இன்னும் நீதி நிவாரணம் கிடைக்கப்பெறவில்லை.

குழுக்கள் அமைக்கப்பட்டும், விசாரணை நடத்தப்பட்டும் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை. நீதிக்காக மக்கள் போராடிவந்தாலும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திதாரிகளை கண்டுபிடிக்குமாறு வலியுறுத்தப்பட்டுவருகின்றது. ஆனால் நெத்திலி மீன்களே சிக்கிவருகின்றன. உண்மையான குற்றவாளிகள் சுதந்திரமாக வாழும் நிலை காணப்படுகின்றது.

சஹ்ரான்தான் இந்த தாக்குதலை நடத்தினார் என்பது அனைவருக்கும் தெரியும். எனினும், அவருடன் தொடர்பை பேணியவர்கள், சஹ்ரான் குழு சுதந்திரமாக செயற்பட இடமளித்தவர்கள், தாக்குதல் மூலம் பிரதிபலன் அடைந்தவர்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நீதி நிலைநாட்டப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டாலும் சாதாரண அரசியல்வாதி, சிரேஷ்ட அதிகாரிகள், செயலாளர்களால் நீதியை வழங்க முடியாது. நீதி நிலை நாட்டப்பட வேண்டுமெனில், பயங்கரவாதத்தை ஒடுக்கியவர்கள், அத்துறைசார் அனுபவம்மிக்கவர்களால்தான் அதனை செய்ய முடியும்.

எனக்கு வாய்ப்பு கிடைக்கும்போது நாட்டு மக்களுக்காக கடமையை உரிய வகையில் நிறைவேற்றுவேன். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளவன் நான். எனவே, எனக்கு வாய்ப்பு கிடைத்தால் இந்த கடமையை நிச்சயம் செய்வேன்.”-என்றார். (அ)

# தேசிய மக்கள் சக்தியின் மே தினம் 4 இடங்களில்!

கொழும்பு, ஏப். 24

தேசிய மக்கள் சக்தியின் மே தினப் பேரணியை நான்கு இடங்களில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு, மாத்தறை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மே தினப் பேரணியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தப் பேரணிகள் நடைபெறும் இடங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமது மே தினப் பேரணியை நடத்துவதற்கு காலி மைதானத்தை வழங்குமாறு கோரியபோதிலும் அது வழங்கப்படவில்லை என அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# சுதந்திரக் கட்சி, பெரமுன பின்னடைவு கண்டுள்ளன

## கூறுகிறார் சுஜீவ சேனசிங்க

கொழும்பு, ஏப். 24

சுதந்திரக்கட்சி மற்றும் பொது ஜன பெரமுன ஆகிய கட்சிகள் பிளவடைந்துள்ளதுடன், அவை பாரிய பின்னடைவையும் சந்தித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக்கட்சி மற்றும் பொது ஜன பெரமுன ஆகியன பிளவடைந்துள்ளதுடன் கட்சி என்ற ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளன.

தற்போதைய நிலையில் பலமிக்க கட்சியென்றால் ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே.

ஊழல் மோசடிகளில் ஈடுபடாத அதேபோல் மக்களை கொலை செய்யாத நேர்மையான ஒருவரே எமது கட்சியின் தலைவராவார்.

எமது கட்சியில் நாட்டு மக்களின் தேவையறிந்து வேலை செய்யக்கூடிய பலம் பொருந்திய இளம் உறுப்பினர்கள் உள்ளனர்.

எனவே நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடியவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே அங்கம் வகிக்கின்றனர்-என்றார். (அ)

# வன்முறைகள் போராட்டமல்ல!

## மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 24

வன்முறை முயற்சிகளுக்கு பெயர் தொழிற்சங்க போராட்டமல்ல என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க போராட்டம் நடத்துவதாக சொல்லி ரவுடித்தனம், காடைத்தனம் செய்கின்றதா என்று கேட்க விரும்புகிறேன்.

தனது அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சியான இந்த தொழிற்சங்கத்துக்கு பொது வெளி போராட்டங்களின் போது மது போதையை தவிர்த்து, ஒழுக்கத்துடன், சட்டம் ஒழுங்கை கடைப் பிடிப்பது பற்றி அறிவுரை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக்கொள்ளவும் விரும்புகிறேன்.

இதுபற்றி சட்டம் ஒழுங்குத் துறை அமைச்சர் டிரான் அலசிடம் உரையாடி, இந்த வன்முறை காடையர்கள், வேலுகுமார் எம்.பியை வன்முறையில் கொல்லப்பட்ட எம்.பி அமரகீர்த்தியின் நிலைமைக்கு தள்ளிவிட முயல்கிறார்களா என்று கேட்டேன்.

தொழிற்சங்கப் போராட்டம் என்ற பெயரில், கண்டி மாவட்ட புசல்லாவையில், தனது தொகுதி மக்கள் பணி தொடர்பில் பயணித்த எமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரை தாக்க முயன்று, தகாத வார்த்தைகளால் பேசி, பயமுறுத்தல் விடுத்துள்ளார்கள். இது தொடர்பான காணொளி தற்போது பொது வெளியில் பரவலாக உள்ளது.

இந்த போராட்டங்களில் கலந்து கொள்பவர்கள் தொழிற்சங்க போராளிகள் அல்ல, ரவுடித்தனம் செய்யும் மது போதை காடையர்கள் என்ற என்ற பதிலும் இயல்பாக கிடைக்கின்றது.

இது தொடர்பில் வேலுகுமார் எம்.பியை, கண்டி சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரிடம் முறையீடு செய்யும்படியும், பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்னையை எழுப்பும்படியும் கூறியுள்ளேன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, சம்பள நிர்ணய சபையிலும், கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையிலும் அங்கம் வகிக்கவில்லை.

எனினும் இந்நிலையிலும் கூட நாம், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்க தயாராகவே உள்ளோம். அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை-என்றார். (அ)

# வீழ்ச்சியடைந்துவரும் நாட்டின் பண வீக்கம்!

கொழும்பு, ஏப். 24

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பிரகாரம் 2024 பெப்ரவரி மாதம் 5.1 வீதமாக பதிவு செய்யப்பட்டிருந்த இலங்கையின் பணவீக்கம் 2024 மார்ச் மாதத்தில் 2.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை உணவு பணவீக்கம் தொடர்ந்தும் 5 வீதமாக காணப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் 5.1 வீதமாகக் காணப்பட்ட உணவு அல்லாத பண வீக்கம், மார்ச் மாதத்தில் 0.7 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனிடையே நாட்டில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளம் காரணமாக காய்கறிகள் மற்றும் பிற பயிர்கள் பயிரிடப்பட்ட 68, ஆயிரத்து 131 ஹெக்ரேயர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு பயிரிடப்பட்ட ஒரு லட்சம் ஹெக்ரேயர் நெற்பயிர்கள் மழை மற்றும் வெள்ளம் காரணமாக சேதமடைந்துள்ளதாக தெவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, சுமார் நான்கரை மாதங்களாக பெய்த தொடர் மழை காரணமாக காய்கறி பயிர்கள் சேதமடைந்தமையினால், இந்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் காய்கறி விலை சடுதியாக அதிகரித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# நாட்டின் ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 24

அரசாங்கம் மக்களுக்கு எவ்வாறான நிவாரணங்களை வழங்கினாலும் மக்களுக்கு ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இல்லை என பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலில் எமக்கு கொள்கைத் திட்டங்களே அவசியமாகின்றன. 2015 ஆம் ஆண்டு தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வாக்குகளை இலக்கு வைத்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

ஆனால் இறுதியில் தோல்வியே கிடைத்தது. அதேபோல் 2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தோல்வியை சந்தித்தது. எனவே, இந்த அரசாங்கங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

அரசாங்கம் மக்களுக்கு அரிசியை வழங்கினாலும் அல்லது வேறு நிவாரணங்களை வழங்கினாலும் மக்களுக்கு ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இல்லை -என்றார். (அ)

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் உள்வாங்குவதற்கு நேர்முகப்பரீட்சை!

## அடுத்த வாரத்தில் நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஏப். 24

**தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை நியமிப்பதற்கான, நேர்முகப் பரீட்சைகளை எதிர்வரும் வாரங்களில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்காக கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மே மாதம் 9ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியல் மற்றும் அழைப்புக் கடிதம் என்பன கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அநுரகுமாரவே அடுத்த எதிர்க்கட்சித் தலைவர்!

## சஜித் அணி ஆருடம்

கொழும்பு, ஏப். 24

அடுத்த பொதுத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே பெறும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரான எதிரணி பிரதம கொறடா பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கிராமிய மட்டத்தில் சஜித்துக்கு ஆதரவு அலை வீசுகின்றது. தம்மை அவர் பார்த்துக் கொள்வார் என உறுதியாக நம்புகின்றனர். எனவே, உள்நாட்டில் சஜித்தின் வெற்றி உறுதியாகியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி எமக்கு சவாலாக அமையாது. ஆனாலும் மொட்டு கட்சியினரை விட கூடுதல் வாக்குகளைப் பெறுவார்கள். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குரிய வாக்கு வங்கியில் ஒரு பகுதி எமக்கும் வரும்.

அடுத்த பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை தேசிய மக்கள் சக்தியே பெறும் என நம்புகின்றேன்-என்றார்.

# விஜயதாஸவின் பெயர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு

கொழும்பு, ஏப். 24

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அமைச்சரின் பெயர் மற்றும் கட்சியின் செயல் குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக சுதந்திரக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் செயல் குழு கூட்டம் இடம்பெற்றிருந்த நிலையில் அமைச்சர் விஜயதாச கட்சியின் பதில் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தடை செய்த திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களின் பெயர்கள் அறிவிப்பு!

கொழும்பு, ஏப். 24

தடைசெய்யப்பட்ட திட்டங்கள் அல்லது பிரமிட் திட்டங்களை செயற்படுத்துவதாக அடையாளம் காணப்பட்ட மேலும் 8 நிறுவனங்களின் பெயர்களை இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்தத் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களில் இணைவதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தகைய நடவடிக்கைகளை ஊக்குவித்தல், நடத்துதல் மற்றும் பணத்தை வழங்குதல் போன்ற குற்றங்களுக்காக, 3 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத் தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படக்கூடும் எனவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# தியத்தலாவை கார் பந்தய விபத்து; விசாரணைக்கு 7 பேர் அடங்கிய குழு

கொழும்பு, ஏப். 24

தியத்தலாவையில் கார் பந்தயத்தின் போது ஏற்பட்ட விபத்துக் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக மேஜர் ஜெனரல் தலைமையிலான 7 பேர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தியத்தலாவையில் இடம்பெற்ற பொக்ஸ் ஹில் சுப்பர் க்ரொஸ் 2024 கார் பந்தயத்தின் போது ஏற்பட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்ததுடன் 21 பேர் காயமடைந்திருந்தனர்.

காயமடைந்துள்ளவர்களில் 15 பேர் தியத்தலாவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன் மேலும் மூவர் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை விபத்து தொடர்பாக காணொளி பதிவுகள் மற்றும் நிழற்படங்களின் அடிப்படையில் ஏற்கனவே இராணுவ உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

இதனிடையே, தியத்தலாவயில் இடம்பெற்ற விபத்து தொடர்பான அறிக்கை எதிர்வரும் 10ஆம் திகதி இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் மற்றும் விபத்துக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அத்துடன் பார்வையாளர்களின் பாதுகாப்பு ஆகிய விடயங்களை அடிப்படையாக கொண்டு குறித்த குழுவினரால் ஆராயப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

# யாழ். நகரில் விபத்து; ஓட்டோ சாரதி காயம்





யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்.நகரை அண்மித்த ஆறுகால்மடச் சந்தியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஓட்டோ ஒன்று பட்டா ரக வாகனத்துடன் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமடைந்ததோடு ஓட்டோச் சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மானிப்பாய்-காரைநகர் பிரதான வீதியில் நாலுகால்மடம் சந்தியில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை ஒன்றில் இருந்து பிரதான வீதியில் ஓட்டோ பயணிக்க தொடங்கிய நிலையில் பின் புறமாக ஆறுகால்மடம் பகுதியில் இருந்து வருகை தந்த பட்டா ரக வாகனம் மோதியது.

இதன்போது ஓட்டோ முற்றாக சேதமடைந்தது. ஓட்டோவைச் செலுத்திய ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த 20 வயதான அஜிந்தன் எனும் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, பட்டா ரக வாகனம் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின் கம்பத்துடன் மோதிப் பகுதியளவில் சேதமடைந்த நிலையில் வாகனச் சாரதி காயங்களின்றி மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# பொலிஸாரின் சூட்டில் இரண்டு பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 24

மொரகஹஹேன, மில்லவ சந்தி, புவக்வத்த பிரதேசத்தில் நேற்றுக் காலை பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பல பாதாள உலகச் செயல்பாடுகளில் ஈடுபட்ட இருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இருவரில் ஒருவர் தனமல்வில, சூரியகம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட “மாதேகொட சுத்தா” என அழைக்கப்படும் சூரஜ் பிரபோத மற்றும் பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய நபர் இராணுவச் சிறப்புப் படையில் பணியாற்றியவர் என தெரியவந்துள்ளது.

நேற்று அதிகாலை, மெகொட பொலிஸார், பேருகட்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வீதித்தடையை நிறுத்தி, போக்குவரத்துச் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, ஓட்டோவை நிறுத்துமாறு கட்டளையிடப்பட்டபோது, அது நிறுத்தப்படவில்லை. அதில் இருந்தோர் பொலிஸாரை நோக்கிச் சுட்டனர்.

பின்னர் தப்பியோடிய ஓட்டோ தொடர்பில் மொரகஹஹேன பிரதேசத்திற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தகவல் அனுப்பியதையடுத்து, மொரகஹஹேன நகரில் தங்கியிருந்த பொலிஸ் குழுவினர் செய்தியை கேட்டறிந்து வேகமாக வந்த ஓட்டோவை நிறுத்துமாறு சைகை காட்டினர்.

ஓட்டோ பொலிஸ் ஜீப் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், ஓட்டோவை ஜீப்பில் துரத்திச் சென்ற பொலிஸ் குழுவொன்று, புவக்வத்தை பகுதியில் வைத்து ஓட்டோ மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது.

அப்போது, அங்கிருந்த இருவர் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில், ஓட்டோவில் இருந்த மற்றுமொருவர் அருகில் உள்ள இறப்பர் தோட்டத்துக்குள் ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் பொலிஸ் ஜீப்பில் ஏற்றி ஹொரண ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அதற்குள் அவர்கள் உயிரிழந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மு.காவுடன் போட்டியிட்டு ஏமாற்றப்பட்டுள்ளோம்!

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

அம்பாறை, ஏப். 24

**முஸ்லிம் சமூகத்தின் நலன்கருதி முஸ்லிம் பிரதி நிதித்துவங்களை பாதுகாக்கும் நோக்கில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட்டு கடைசியில் ஏமாற்றப்பட்டுள்ளோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**



பொத்துவில் பிரதேசத்தில் சனிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முஸ்லிம் சமூகத்தின் நலன்கருதி முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை பாதுகாக்கும் நோக்கில் புத்தளம் மாவட்டத்திலே முஸ்லிம் காங்கிரஸோடு சேர்ந்து அவர்கள் சார்ந்த கட்சி ஒன்றில் உடன்படிக்கைகளை செய்து தராசு சின்னத்தில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டோம். அவ்வாறு போட்டியிட்டதனால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக நிறுத்தப்பட்ட வேட்பாளர் அலி சப்ரி றஹீம் வெற்றி பெற்றார்.

எமது கட்சியைச் சேர்ந்த அலி சப்ரி ரஹீம் தங்கம் கடத்தியதனால் அவருடைய பிரச்னை தொடர்பாக கட்சி விசாரணை செய்து அவரைக் கட்சியிலிருந்து நீக்கினோம். அவரை நீக்கிய அந்த கடிதத்தினை தராசு சின்னத்தின் கட்சிச் செயலாளராக இருந்த ரவூப் ஹக்கிமுடைய உறவினர் நயிமுல்லாவிடம் கொடுத்தோம். அதற்கான பதில் கடிதத்தினை தாருங்கள் என தொடர்ச்சியாக கோரிக்கையும் விடுத்தோம். அவரினால் எந்தவிதமான பதிலும் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிமை மூன்று முறை நேரடியாகச் சந்தித்து எமது உடன்படிக்கையின் பிரகாரம் செயல்படுங்கள் என தெரிவித்தேன். ஆனால் அவர்களிடமிருந்து இதுவரை எந்தவிதமான பதிலுமில்லை. பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நீதிமன்ற உத்தரவைப் பெற்று தனது உறுப்பினர் பதவியினைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்.

தேர்தல் காலங்களில் சமூகத்தினுடைய ஒற்றுமை பற்றி பேசிவிட்டு ஒற்றுமையினால் பெறப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமூகத்துக்கு துரோகம் செய்துவிட்டு செல்கின்ற போது ஒற்றுமைப்பட்டு செயல்பட்ட இரண்டு கட்சிகள் ஒரு கட்சியினுடைய விடயத்தில் உடன்படிக்கையினை மீறுவது பாரிய துரோகமாகும். இவ்வாறான பாரிய துரோகத்தினை முஸ்லிம் காங்கிரஸ் எமக்கு செய்தது. இவ்வாறு துரோகம் செய்த கட்சியோடு எதிர்காலத்தில் எவ்வாறு இணைந்து செயல்படுவது- என்றார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியலாக்கும் சஜித். ஜே.வி.பி.

## பிள்ளையான் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, ஏப். 24

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பை உலகளாவிய ரீதியில் கையாண்ட அமெரிக்கா, அவுஸ்திரேலியா. பொலிஸார் இதனை சரியாக கணித்து ஆராய்ந்து நடந்ததை கண்டு பிடித்து அறிக்கையை சமர்ப்பித்து விட்டு வெளியேறி விட்டார்கள். ஆனால், இலங்கையில் ஒரு பொறுப்பற்ற எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் ஜே.வி.பி போன்ற கட்சிகளும் தற்போது இதனை கையில் எடுத்து அரசியலாக்கப் பார்க்கிறார்கள் என இராஜாங்க கிராமிய வீதி அபிவிருத்தி அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் போது ஒரே நேரத்தில் பல இடங்களில் குண்டு வெடிப்பை தற்போது அரசியலாக்க பார்க்கிறார்கள். இவர்கள் ஆழமான அறிவை தேடி பார்க்கவேண்டும். இதனை அரசியல் சாயம் பூச முயல்கிறார்கள். எல்லா மதங்களிலும் கடும் போக்கானவர்கள் இருக்கிறார்கள். உலகளாவிய ரீதியில் தடை செய்யப்பட்ட பல இயக்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் ஒரு கூறாகத்தான் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதமும் இருந்தது. பல நாடுகளிலும் பயிற்சி எடுத்த காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்றானும் அவரது குழுவினரும் இருந்தனர். இதனை உலகளாவிய ரீதியில் கையாண்ட அமெரிக்கா, ஆஸ்திரேலியா பொலிசார் இதனை சரியாக கணித்து ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பித்து விட்டு வெளியேறி விட்டார்கள். ஏனென்றால் அவர்கள் சரியாக நடந்ததை கண்டுபிடித்துவிட்டார்கள்.

இவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற அச்சம் நமக்கு உள்ளது. இதற்காக தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும். மதத்தின் பெயரால் நூறாண்டுகளுக்கு மேல் இயங்கும் இந்த வகாபாதத்தை முறியடிப்பது இலகுவான விடயம் அல்ல இதனை முறியடிப்பதற்கு அதி தொழில்நுட்பம் கூடிய பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்கப்பட வேண்டும்.

நாட்டில் ஏனைய மதத்தவரையும் மதித்து நடக்க வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு இலங்கை போன்ற நாட்டில் இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுத்தால் ஏனைய நாடுகளைப் போல் இலங்கையும் அபிவிருத்தி இலக்கை அடைய முடியும்- என்றார். (அ)

# காரைதீவில் டெங்கு சோதனை



காரைதீவு, ஏப். 24

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீர் அவர்களின் ஆலோசனை இன் கீழ் காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகள், அரச நிறுவனங்களில் டெங்கு பரிசோதனை மேற்கொள்ளபட்டது.

இதில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு கட்டுப்பாட்டு கள உத்தியோகதர்கள் கலந்து கொண்டனர். இதன் போது குறைபாடுகள் இனம் காணப்பட்டு திருத்த நடவடிக்கை மேற்கொள்ளபட்டதுடன், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (அ)

# விவசாயக் கருவிகள் வழங்கல்



திருமலை, ஏப். 24

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தி தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலை மாவட்ட நலன் புரிச் சங்க தலைவர் சு.குகதாசன் நான்கு குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் எந்திரம் மற்றும் தூவல் நீர்ப்பாசனக் கருவிகளை வழங்கினார். (அ)

# நோன்புப் பெருநாள், புத்தாண்டு நிகழ்வு காத்தான்குடி சமுர்த்தி வங்கி ஏற்பாட்டில்

மட்டக்களப்பு, ஏப். 24

காத்தான்குடி சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹிழுறிய்யா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஏ. எம்.சுல்மி, உதவி பிரதேச செயலாளர் எம்.எஸ்.சில்மியா, கணக்காளர் கே.சித்ரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.தனுஜா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.ற ஊப், கிராம நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.ஜுறூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பத்மா ஜெயராஜ் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் ஆ. வாமதேவன், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ். கண்ணன். புதிய காத்தான்குடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில், தேசிய நீர் வழங்கள் அதிகாரசபையின் காத்தான்குடி பிரிவு பொறியியலாளர் எம்.ஸமட், இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ. டபில்யுள் இர்ஷாத் அலி, மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களான யானைக்கு கண் வைத்தல், முட்டி உடைத்தல், தீப்பந்தம் வீசுதல், தேங்காய் துருவுதல் ,சாக்கோட்டம், தொப்பி மாற்றுதல் தேசிக்காய் ஓட்டம், பணிஸ் சாப்பிடுதல், சங்கிலி குதிரை ஓட்டம் , பலூன் உடைத்தல் மெதுவாக சைக்கில் ஓட்டுதல் போன்ற விளையாட்டுகள் இடம்பெற்றதுடன் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)





# இராணுவ உலங்கு வானூர்திகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

## மலேசியாவில் 10 பேர் பலி!!

கோலாலம்பூர், ஏப். 24

மலேசியாசில் 2 உலங்கு வானூர்திகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்திற்குச் சொந்தமான குறித்த 2 உலங்கு வானூர்திகளும் மலேசியாவின் அரச நிகழ்வு ஒன்றிற்கான ஒத்திகையில் ஈடுபட்டிருந்த போது, இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த உலங்கு வானூர்திகளில் 10 பேர் பயணித்த நிலையில் அவர்கள் அனைவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் லுமட் இராணுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

(அ)

# 14 வயதுச் சிறுமியின் கருவை கலைக்க நீதிமன்று அனுமதி!

புதுடில்லி, ஏப். 24

பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 14 வயது சிறுமியின் கருவைக் கலைப்பதற்கு இந்திய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மகாராஸ்டிரா மாநிலத்தில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளான 14 வயது சிறுமி ஒருவர் கர்ப்பமடைந்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த சிறுமியின் கருவைக் கலைப்பதற்கான அனுமதியைப் பெற அவரது குடும்பத்தினர் மும்பை நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளனர்.

எனினும் வழக்கை விசாரித்த நீதிபதிகள் கரு, 30 வார காலத்தைக் கடந்து விட்டதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்ததை குறிப்பிட்டு கருவைக் கலைக்க அனுமதி மறுத்துள்ளனர்.

இதனால் சிறுமியின் பெற்றோர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் உயர்நீதிமன்றின் தலைமை நீதியரசர் டி. ஒய். சந்திரசூட் தலைமையிலான குழுவினர், கருவைக் கலைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

முன்னதாக சிறுமிக்கு மருத்துவ பரிசோதனை செய்து கருவைக் கலைக்க முடியுமா? அவ்வாறு கருவைக் கலைத்தால் சிறுமிக்கு பாதிப்புக்கள் ஏற்படுமா? என்பது குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென, மும்பையில் உள்ள சியோன் மருத்துவமனைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் - சியோன் மருத்துவமனையின் பரிந்துரையின்படி உயர்நீதிமன்றம் கருக் கலைப்புக்கு அனுமதி வழங்கியுள்ளது.

(அ)



# நியூயோர்க் குற்றவியல் நீதிமன்றத்தில் ட்ரம்ப்!

நியூயோர்க், ஏப். 24

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நியூயோர்க்கில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைகளுக்கு முன்னிலையாகியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

2016ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்னதாக நடிகையான ஸ்டோர்மி டேனியல்ஸூக்கு 130,000 டொலர் பணம் செலுத்தியதை மறைக்க முற்பட்டதாக டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வணிகப் பதிவுகளை திரிபுப்படுத்தியமை உள்ளிட்ட தம்மீதான 34 குற்றச் சாட்டுக்களை டொனால்ட் ட்ரம்ப் மறுத்துவருகிறார்.

அத்துடன், நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸூடன் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் முதலாவது விசாரணை, எதிர்வரும் வாரத்தில் 12 பேர் கொண்ட நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்கப்படவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியொருவர் குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெ. படைத்தளம் மீது சரமாரியான தாக்குதல்!



டமஸ்கஸ், ஏப். 24

சிரியாவில் உள்ள அமெரிக்க படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தோல்வியடைந்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் ருமாலினில் உள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் வசிக்கும் தளத்தின் மீது ஈராக்கிலிருந்து ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை நடத்தியவர்களை தேடி வருவதாக ஈராக் அதிகாரிகள் நேற்று முன் தினம் தெரிவித்தனர்.

எனினும், இந்த தாக்குதலுக்கு எந்த குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

இதேவேளை நேற்று முன் தினம், ஈராக்கின் அல்-அசாத் விமானத் தளத்திற்கு அருகே அமெரிக்கப் படைகள் 2 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆங்கில கால்வாய் மூலம் பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்கு முயற்சி!

## ஐவர் நீரில் மூழ்கிப் பலி!!



லண்டன், ஏப். 24

ஆங்கில கால்வாய் ஊடாக பிரித்தானியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட ஐந்து புலம்பெயர்ந்தோர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இன்று அதிகாலை பிரான்சில் இருந்து நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்தோருடன் பயணித்த படகு கடற்கரையில் விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பிரான்ஸ் கடலோர காவல்படை அவசர மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், குறைந்தது ஐந்து பேர் நீரில் மூழ்கி இறந்ததாக அறிவிக்கப்பட்டது.

பலர் மீட்கப்பட்டு கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், தொடர்ந்தும் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் கடலோரக் காவல்படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களை ருவாண்டாவிற்கு நாடு கடத்தும் மசோதா நிறைவேற்றப்பட்ட சில மணி நேரத்தில் இந்த விபத்து நடந்துள்ளது.

பிரித்தானியா புலம்பெயர் குடியேறிகளை கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில், ருவாண்டாவிற்கு நாடு கடத்தும் சட்ட மூலத்தை கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது.

இதன்படி, நாட்டிற்குள் நுழைந்த சட்டவிரோத குடியேறிகள் அடுத்த வாரம் முதல் ருவாண்டாவிற்கு நாடுகடத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# 2026 இலங்கை வறுமை வீதம் 22 வீதத்தைவிட அதிகரிக்கும்!

## உலக வங்கி எச்சரிக்கை

**கொழும்பு, ஏப். 24**

**2026 ஆம் ஆண்டில் இலங்கையின் வறுமை விகிதம் 22 வீதத்தை விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.**

உலக வங்கி அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டு 2.2 வீத மிதமான வளர்ச்சியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் பின்னர் நாடு இன்னும் அதிக அளவிலான வறுமை மற்றும் வருமான சமத்துவமின்மையை எதிர்கொள்வதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் வறுமை விகிதங்கள் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக அதிகரித்துள்ளதாகவும், 2023ஆம் ஆண்டில் 25.9 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2026ஆம் ஆண்டில் நாட்டின் வறுமை விகிதம் 22 சதவீதத்தை விட அதிகரிக்கும் என்றும் உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# இலவச அரிசித் திட்டத்தில் லஞ்சம் கோரும் அதிகாரிகள்

கொழும்பு, ஏப். 24

அரசாங்கத்தின் தேசிய அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் 10 கிலோ அரிசியை வழங்குவதற்கு முன்னர் ஒருவரிடமிருந்து தலா 100 ரூபாய் அறவிடப்படுவதாக பொலனறுவை-மன்னம்பிட்டி, திம்புலாகல பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

புத்தாண்டு விழாவில் பங்கேற்பதற்காக அழைக்கப்பட்டுள்ள விருந்தினர்களை வரவேற்று மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவே இந்தத் தொகை அறவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், பணம் செலுத்தத் தவறியவர்களுக்கு 10 கிலோ அரிசி கிடைக்காது என தெரிவிக்கப்பட்டதாகவும் பொலன்னறுவை-மன்னம்பிட்டி, திம்புலாகல பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனினும், அரிசி வழங்கும் போது பணம் அறவிடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக திம்புலாகல பிரதேச செயலாளர் எஸ்.எம். அல் அமீன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பணம் அறவிடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்படவில்லை எனவும், அது குறித்து எழுத்து மூலம் தெரிவித்தால், உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் குறித்து விசேட கவனம் செலுத்துக!

கொழும்பு, ஏப். 24

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பாடசாலை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் 2024ஆம் கல்வி ஆண்டுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் இந்த நாட்களில் வயிற்றோட்டம் தொடர்பான நோயாளர்கள் பதிவாகி வருகின்றமையிலேயே பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு பாடசாலை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் நாளை ஆரம்பமாகவுள்ளமையால், அதற்கு முன்னர் உரிய பாடசாலைகளில் அதிபர்கள் மாணவர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இணையவழி மூலம் கடன் பெற்று தருவதாக மோசடி!

## சந்தேக நபர் கைது

கொழும்பு, ஏப். 24

இணையவழி மூலம் கடன் பெற்று தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேகத்தில் ஒருவர் திஹகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் காலி இமதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபராவார்.

இவருக்கு எதிராக வாகனத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இவர் நீதிமன்றில் ஆஜராகாமல் தலைமறைவாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திஹகொட பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து கைக்கணினி, 6 கையடக்க தொலைபேசிகள் , 8 வங்கிக் கணக்கு அட்டைகள் மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் இணையவழி மூலம் கடன் பெற்று தருவதாகக் கூறி பல்வேறு பிரதேசங்களில் உள்ள மக்களின் பணத்தைத் தனது வங்கிக் கணக்கில் பெற்று பண மோசடி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்காக இவர் முகநூல் மற்றும் வட்ஸ் அப் உள்ளிட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தனியார் நிதி நிறுவனத்தை உடைத்து தங்கம் கொள்ளை

## இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப். 24

கலவானை தனியார் நிதி நிறுவனமொன்றை உடைத்து தங்கம் திருடிய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். குறித்த விற்பனை நிலையத்தில் விற்பனை அதிகாரி ஒருவரும் தங்கப் பொருட்களுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கலவான பிரதேசத்தில் வசிக்கும் 26 மற்றும் 33 வயதுக்குட்பட்ட இருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

68,978,357 ரூபா பெறுமதியான சங்கிலிகள், மோதிரங்கள், வளையல்கள், பிரேஸ்லட், காதணிகள், பென்டன்கள் உள்ளிட்ட 03 கிலோ 770 கிராம் தங்கப் பொருட்கள் மற்றும் சி.சி.ரி.வி அமைப்பின் டெகோடர் ஆகியவை திருடிச் செல்லப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் பதில் முகாமையாளர் கலவானை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலவானை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கடன் மறுசீரமைப்பில் எந்த மாற்றமும் இல்லை

## பந்துல குணவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஏப். 24

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வித மாற்றமும் இன்றி தொடர்வதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஹோமாகம தொகுதியில் பொதுஜன பெரமுனவின் செயகுழு கூட்டத்தில் அமைச்சர் இதனை கூறினார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் நெடுஞ்சாலைகளின் வருமானம் மற்றும் கடனைச் செலுத்துவதற்கான கால அவகாசம் குறித்து அமைச்சர் தனது கருத்துக்களை வெளியிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர், சீனா, இந்தியா போன்ற நாடுகளின் நீண்ட கலந்துரையாடலின் விளைவாக கடன் மறுசீரமைப்பு இறுதி ஒப்பந்தம் கைச்சாத்திட வாய்ப்பு உள்ளதுடன் ஜப்பான் மற்றும் பாரிஸ் கிளப் ஆதரவு வழங்க ஒப்புக்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 2024 முதல் காலாண்டில் அரச வருமானம் உயர்வு!

கொழும்பு, ஏப். 24

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் எதிர்பார்த்த அரச வருமானத்தை விட அதிகமாக கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அந்த காலப்பகுதியில் நாட்டின் பிரதான வருமானம் ஈட்டும் இலங்கை சுங்க, கலால் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களங்கள் 834 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



அது எதிர்பார்க்கப்பட்ட வருமானமான 787 பில்லியன் ரூபாவை விட 6 வீதத்தை அதிகம் என அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 381 பில்லியன் ரூபாவை விட 13 வீத அதிகரிப்புடன் 430 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. சுங்கத் திணைக்களம் 353 பில்லியன் ரூபா இலக்கை எட்டியுள்ளது. கலால் திணைக்களம் 96 வீத வருமானத்துடன் 51 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டில் அரசாங்கம் 4,106 பில்லியன் ரூபா வருமானத்தை எதிர்பார்க்கிறது, அதில் 93 வீதம் வரி வருமானம். அரசாங்க வருமானம் குறைந்தமையே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம். முதல் காலாண்டில் இந்த இலக்குகளை தாண்டியமை மற்றும் வருமான முறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 2024 ஆம் ஆண்டு வருவாய் இலக்குகளை எட்ட முடியும்-என்றார். (அ)

# பிரபல வர்த்தகரை கொல்ல முயன்ற இருவர் கைதாகினர்

கொழும்பு, ஏப். 24

கம்பஹா பிரதேசத்தில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரை சுட்டுக் கொலை செய்யத் திட்டமிட்ட இருவர் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெவெல்தெனிய மற்றும் மினுவாங்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 50 மற்றும் 30 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தற்போது துபாயில் தலைமறைவாக உள்ள "கெஹெல்பத்தர பத்மே" மற்றும் அவரது சகாவான "அவிஷ்க" ஆகியோரின் தலைமையில் இந்த கொலை திட்டமிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேலியகொடை புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மின்சார ஊழியர் சங்கத்தின் ஆர்ப்பாட்டத்துக்கு தடை!

கொழும்பு, ஏப். 24

இலங்கை மின்சார ஊழியர் சங்கம் இன்று புதன்கிழமை நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக பொலிஸார் நீதிமன்ற உத்தரவு பெற்றுள்ளனர்.

வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளுக்கு இடையூறாக எந்தவொரு வீதியையும் கடக்க வேண்டாம் எனவும், பொல்துவ சுற்றுவட்டத்தை சுற்றி ஆர்ப்பாட்டம் அல்லது வன்முறையில் ஈடுபட வேண்டாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பொலிஸ் உத்தியோகத்தர் தாக்கப்பட்டார்!

கொழும்பு, ஏப். 24

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை உடைக்கப்பட்ட கண்ணாடி போத்தலால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

காலி - கலுவெல்ல பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சார்ஜன்ட் தர உத்தியோகத்தர் கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலை நடத்தினார் என்று கூறப்படும் சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை காலி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## நீதிபதி....

வழியாகக் காரில் சென்றார். மோட்டார் சைக்கிளிலும் காரிலும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இந்த சம்பவத்தில் மிகவும் குறுகிய தூர இடைவெளியில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் உயிர் தப்பினார். இந்த சம்பவத்தில், வயிற்றில் படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் தர உத்தியோகத்தரான ஹேமசந்திர என்பவர் உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு எதிரான சுருக்கமுறையற்ற விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நிறைவடைந்த நிலையில் சட்டமா அதிபரால் குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மீதான விசாரணையே இன்றைய தினம் நடைபெறவுள்ளது. (ஐ)

## பெண்ணுக்கு...

முறிந்ததற்கான அடையாளமும் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண், வடமராட்சியில் அவர் தங்கியிருந்த பாதுகாப்பு இல்லத்துக்கு சென்ற பின்னர், அங்கு தனக்கு நேர்ந்த கொடுமைகளை குறிப்பிட்டுள்ளார். இதையடுத்து, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் முதல்கட்ட விசாரணைகளை நடத்தினர். சம்பவம் நடந்த இடம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்டது என்பதால் விசாரணைகளை அவர்களிடம் ஒப்படைத்தனர்.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு சென்று பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

மேலும், இந்த வாக்குமூலத்தில் பாதிக்கப்பட்ட பெண் தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்திய 10 பேரின் விவரங்களை வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-02)

## சஹ்ரானுடன்...

ஹாசிமும் அவரின் சகா இலாம் அஹமட்டும் 20ஆம் திகதி அதே ஹோட்டலில் சந்தித்த நபர்களின் விவரம் மறைக்கப்பட்டுள்ளது - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் முஜிபுர் ரஹ்மான் சாடியுள்ளார்.

இந்த விடயம் குறித்து முஜிபுர் ரஹ்மான் வெளியிட்ட தகவல்கள் வருமாறு,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னரான இரண்டு வாரங்களில் ஹோட்டலில் தங்கியிருந்தவர்களின் விவரங்கள் உயர்நீதிமன்றத்திடம் வழங்கப்பட்டுள்ளன. எனினும் 616, ஆம் இலக்க அறையில் தங்கியிருந்தவர்களின் பெயர் விவரங்களை ஹோட்டல் நிர்வாகம் வழங்கவில்லை.

அத்துடன், ஹோட்டலின் 6ஆவது மாடியில் 623ஆம் இலக்க அறையில் தங்கியிருந்தவர்களின் விவரமும் மறைக்கப்பட்டுள்ளது. அந்த அறையில் தங்கியிருந்தவர்களும் சஹ்ரான் ஹாசிம் குழுவினருடன் தொடர்புபட்டவர்கள்போல் தோன்றுகின்றது - என்றார். (ஐ)

## இன்று...

நீர்ப்பாசனத் திட்டமான உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஈரானின் நிதி உதவியில் அமைக்கப்பட்டதாகும். இந்தத் திட்டத்தை இன்று புதன்கிழமை ஈரான் ஜனாதிபதியுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைப்பர்.

இதேநேரம், ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. (ஐ)

# சுதந்திர கட்சி தலைமை பதவியை இராஜினாமா செய்வார் மைத்திரிபால?



கொழும்பு, ஏப். 24

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராஜினாமா செய்யத் தயாராகி வருகிறார் என்று கூறப்படுகிறது.

தற்போது நீதிமன்றத்தின் தடை உத்தரவுக்கு உள்ளாகியுள்ள சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகுவார் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் யாப்பின் பிரகாரம் தலைவர் பதவியில் இருந்து விலகும் தலைவர் கட்சியின் போஷகர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

தற்போது கட்சியில் கடும் கருத்து மோதல் நிலவி வரும் நிலையில், இரு பிரிவினரும் இரண்டு பதில் தலைவர்களின் பெயர்களைக் கூறி தேர்தல் ஆணையத்திடம் கடிதம் கையளித்துள்ளனர்.

இந்த நியமனங்களுக்கு எதிராக அதே கட்சியைச் சேர்ந்த பலரும் தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடு அளித்துள்ளனர். (ஐ)

# அறகலய கோஷத்தின் மாற்றத்தை எமது கட்சிலிருந்து ஆரம்பிக்க தயார்

## பொதுஜன பெரமுனவின நாமல்



கொழும்பு, ஏப். 24

"அறகலய"வில் கோஷமாக மாறிய அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துதலை எமது கட்சியில் இருந்தே ஆரம்பிக்க தயாராக இருக்கிறேன் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அறகலய காலத்தில் எரியூட்டப்பட்ட சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட பணிமனையை புனரமைத்துத் திறந்து வைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தனது உரையில்,

"என் தாத்தாவின் சிலை உடைக்கப்பட்டது. நாங்கள் குடியிருந்த வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்தப் பிள்ளைகளை வெறுப்பதில் பயனில்லை. அவர்கள் ஒரு குறிப்பிட்ட குழுவால் தூண்டப்பட்டனர். குழந்தைகள் பொதுவாக கொஞ்சம் குறும்புக்காரர்கள் - அதைப் புரிந்து கொள்ள நான் தந்தையாக வேண்டியிருந்தது. பெரியவர்களாகிய உங்கள் பொறுப்பு, அந்த குழந்தைகளுக்கு யதார்த்தத்தை விளக்குவது, அவர்கள் உலகத்தை திறந்த மனதுடன் பார்க்க வேண்டும்", என்றார். (ஐ)

## அரசியல்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கத் தில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்,

அரசாங்கத்தின் புதிய கல்வி மறுசீரமைப்பு செயல்பாடுகளை மேற்கொள்ளும் போது அதனை கல்வி நிபுணர்களுக்கு மாத்திரமானதாக மட்டுப்படுத்தாமல், பாடசாலை ஆசிரியர்கள், பொருளாதார துறையினர், அகில இலங்கை வளவாளர்கள் சங்கம் உள்ளிட்ட தரப்பினரையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று உலகின் பல நாடுகளில் பாடசாலைக் கல்வியும் பிரத்தியேக வகுப்பு முறையும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. கடந்த பொருளாதார சரிவின்போது பல்வேறு அனுபவங்களைப் பெற்றோம். நாம் அந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து தற்போது படிப்படியாக மீண்டு வருகிறோம். புதிய பொருளாதாரத்துடன் நாம் முன்னேற வேண்டும். அதன்போது ஏற்றுமதி சார்ந்த மற்றும் அதிக போட்டித்தன்மை கொண்ட பொருளாதாரம் எமக்குத் தேவை. மேலும், வறுமையை குறைக்கும் பொருளாதார வளர்ச்சியை உருவாக்க வேண்டும்.

மேற்கத்திய கல்வி முறை இலங்கையிலிருந்து ஆசியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதேபோன்று, ஏனைய நாடுகளுக்கு முன் இலவச கல்வியை நாம் தொடங்கினோம். எனவே இந்த புதிய தொழில்நுட்பத்தை கல்வியில் எவ்வாறு சேர்ப்பது என்பதை அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் நாம் சிந்திக்க வேண்டும். அதற்கேற்ப, நவீன கல்வி முறைக்கு நாம் செல்ல வேண்டும். 2030 ஆம் ஆண்டுக்கு அல்ல, 2050 ஆம் ஆண்டுக்கான கல்வி முறையாக அது இருக்க வேண்டும்.

இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தங்களை கல்வி நிபுணர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. அவர்களைப் போன்று, பாடசாலை ஆசிரியர்கள், பொருளாதாரத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் மற்றும் அகில இலங்கை தொழில்சார் வளவாளர்கள் சங்கம் போன்ற சங்கங்களையும் இதில் பங்கேற்க செய்ய வேண்டும்.

அந்த புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு, நவீன கல்வி முறைக்கு செல்ல வேண்டும். அங்கு முன்வைக்கப்படும் எந்த ஆலோசனையும் நிராகரிக்கப்படக்கூடாது. மேலும் கல்வியை அரசியல் உதைபந்தாக மாற்றக்கூடாது. நாம் எவ்வளவு விளையாடினாலும் கோல் அடிக்க முடியாது.

இறுதியில் நாடுதான் தோல்வி அடையும். எனவே, இதிலிருந்து விடுபட்டு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். எதிர்காலக் கல்வி முறையை அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும். அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை செய்து கொடுக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இதன்படி, 2050 ஆம் ஆண்டாகும் போது இந்நாட்டுக்கு சிறந்த கல்வி முறை எது என்பதை இந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கலந்துரையாடப்பட வேண்டும். அதன் பிறகும் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்களோடு நாம் தொடர்ந்து பரிமாற்றத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சுதந்திரக் கட்சியை நான் மீட்டெடுப்பேன்

## விஜயதாச ராஜபக்ஷ சூளுரை



கொழும்பு, ஏப். 24

**“சுதந்திரக்கட்சியை நிச்சயம் மீட்டெடுப்பேன். நான் கை வைத்த விடயங்களில் தோல்வியில் முடிந்தது கிடையாது.” - என்று சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். கட்சியில் உறுப்புரிமை இருப்பதால் தான் பதில் தலைவராகியுள்ளேன். கட்சியை நிச்சயம் மீட்டெடுப்பேன். நான் கை வைத்த காரியங் கள் தோல்வியில் முடிந்தது கிடையாது.

தற்போதைய அரசில் பல கட்சி கள் உள்ளன. எனவே, சுதந்திரக்கட்சிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. புதிய பதவியை ஏற்றுள்ளதால் அமைச்சு பதவி பறிபோகும் என நம்பவில்லை - என்றார். (அ)

# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடியை நீந்திக் கடக்க முயன்ற முதியவர் மரணம்!

சென்னை, ஏப். 24

தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்தி கடக்க முயன்ற இந்தியாவின், பெங்களூரைச் சேர்ந்த 78 வயதுடைய முதியவர் நடுக்கடலில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை உள்ள 30 கிலோமீற்றர் தூரம் கொண்ட பாக்கு நீரிணைப் பகுதியை சமீப காலமாக பல நீச்சல் வீரர்கள் நீந்தி கடந்து சாதனை படைத்து வருகின்றனர்.

இந்நிலையில், தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல் முனைவரையான தூரத்தை நீந்தி கடப்பதற்காக இந்திய - இலங்கை இரு நாட்டு அரசாங்கத்திடம், உரிய அனுமதி பெற்று நேற்று முன்தினம் 31 பேர் கொண்ட குழு ராமேஸ்வரத்தில் இருந்து படகு மூலம் தலைமன்னாருக்கு வருகை தந்துள்ளது.

அங்கிருந்து நேற்று அதிகாலை சுமார் 12.10 மணி அளவில் கடலில் குதித்து தொடர் ஓட்டம் முறையில் இந்தக் குழுவினர் நீந்தத் தொடங்கியுள்ளனர்.

இதன்போது சுமார் மூன்று மணி அளவில் தொடர் ஓட்ட நீந்துதலில் மூன்றாவது இடத்தில் இருந்த இந்தியாவின், பெங்களூர் மாநிலத்தைச் சேர்ந்த 78 வயது டைய கோபால் ராவ் என்பவருக்கு திடீரென நடுக்கடலில் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரை பரிசோதித்த மருத்துவக் குழு, மாரடைப்பினால் குறித்த முதியவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கோபால் ராவ் உடல், தனுஷ்கோடி பாலம் மீன்பிடித் துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டயடுத்து, உடற்கூறு ஆய்வுக்காக ராமேஸ்வரம் அரசு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன் வந்த நபர் ஒருவரின் இந்த உயிரிழப்பால், ஏனைய 30 பேரும் மன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல் முனை வரையான சாதனையைக் கைவிட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டது. (அ)

# போதைப்பொருளுடன் கைதாகினார் மாநகர சபை முன்னாள் கணக்காளர்

அம்பாறை, ஏப். 24

நீண்ட காலமாக போதைப்பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான சந்தேக நபரை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த பெரிய நீலாவணை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மையில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் மருதமுனை நகரை அண்டிய பகுதியில் கைதான சந்தேக நபர் ஒருவரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பெரிய நீலாவணை பொலிஸார் துரித விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஐஸ் போதைப்பொருள் 840 மில்லிகிராம் கேரளா கஞ்சா 4 கிராமும் 540 மில்லி கிராமும் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளராக பணியாற்றிய 39 வயது மதிக்க தக்க சந்தேக நபர் பெரிய நீலாவணை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் குறித்த சந்தே நபர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே. எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ரயில்வே பொதுமுகாமையாளர் பண்டார நேற்று காலமானார்!

கொழும்பு, ஏப். 24

ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யூ. பண்டார காலமானார்.

அநுராதபுரம் ரயில் திணைக்களத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்ததாக அந்த திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர், கசிப்பு காய்ச்சியமை தொடர்பில் கடந்த 19 ஆம் திகதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கடந்த 20 ஆம் திகதி மாலை யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று முன் தினம் மதியம் 12:00 மணியளவில் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார். (அ)

# கொத்மலை நீர்த்தேக்கத்தில் தண்ணீரின் அளவு குறைந்தது!



கொழும்பு, ஏப். 24

மேல் கொத்மலை நீர்த்தேக்க பகுதிகளில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக செயின்ட் கிளேர் நீர்வீழ்ச்சி மற்றும் டேவோன் நீர்வீழ்ச்சிகளின் நீர் கொள்ளளவு குறைந்துள்ளது.

உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைக் கவர்ந்த நீர்வீழ்ச்சியாக இந்த இரண்டு நீர்வீழ்ச்சிகளும் விளங்குகின்றன.

இதேவேளை, மேல் கொத்மலை பகுதிகளில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்துள்ளதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அம்மனுக்கு சாத்திய சேலை 16 இலட்சம் ரூபாவுக்கு ஏலம்!

## புங்குடுதீவு அம்மன் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 24

புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவில் அம்மனுக்குச் சாத்தப்பட்ட சேலை 16 இலட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க புங்குடுதீவு கண்ணகியம்மன் தேவஸ்தானத்தின் முத்தேர் இரதோற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கண்ணகியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களுக்கு இடம்பெற்ற விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து வசந்த மண்டபத்திலிருந்து எழுந்தருளிய அம்பாள், உள்ளிட்ட பரிவார தெய்வங்கள் பீடத்தில் வீற்றிருந்து முத்தேரேறி பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தந்த பக்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் கண்ணகியம்மன் தேர்த் திருவிழாவில் அம்மனுக்குச் சாத்தப்பட்ட சேலை ஒன்று ஏலத்தில் விடப்பட்டது.

அந்த சேலையை பக்தர் ஒருவர் 16 இலட்சம் ரூபாவுக்கு வாங்கியுள்ளதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ)

# ஈரான் ஜனாதிபதிக்கு வரவேற்பு பதாதைகள்



கொழும்பு, ஏப். 24

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தருகிறார். அவரை வரவேற்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சார்பில் தலைநகர் கொழும்பில் வரவேற்பு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை திறந்து வைக்கப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் அவரை வரவேற்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சார்பில் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஐ. ஏ. கலீலுர் ரஹ்மான், எம். காதர், எம்.முசம்மில் போன்றோர்களினால் இந்த வரவேற்பு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

# கொழும்பில் விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 24

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இன்று நாட்டுக்கு வருகை தரவுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதிப்படுத்தினார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இலங்கை அரசாங்கத்துடன் ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாக இலங்கைக்கான ஈரான் தூதுவர் அலி ரேசா டெல்கோஷ் கூறியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# 9 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அபார வெற்றி




ஜெய்ப்பூர், ஏப். 24

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 38 ஆவது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியை 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அட்டகாசமான வெற்றியைப் பதிவு செய்தது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி.

ராஜஸ்தான் வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இந்தப் போட்டியில் சதம் விளாசி தனது அணியின் வெற்றிக்கு உதவினார்.

ஜெய்ப்பூரிலுள்ள சவாய் மான்சிங் கிரிக்கெட் மைதானத்தில் குறித்த போட்டி நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அந்த அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது.

52 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறியது மும்பை. ரோஹித் சர்மா, இஷான் கிஷன், சூர்யகுமார் யாதவ் மற்றும் முகமது நபி ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தனர். இந்நிலையில் நேஹல் வதேரா மற்றும் திலக் வர்மா இணைந்து 99 ஓட்டங்களுக்கு சிறந்த இணைப்பாட்டம் அமைத்தனர்.

24 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்து வதேரா ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹர்திக் பாண்டியா 10 ஓட்டங்களில் வெளியேறினார். திலக் வர்மா 65 ஓட்டங்கள் எடுத்தார். டிம் டேவிட் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கோட்ஸி ஓட்டம் எதுவும் எடுக்காமல் விக்கெட்டை பறிகொடுத்தார்.

180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஆர். ஆர். அணி விரட்டியது. ஜெய்ஸ்வால் மற்றும் பட்லர் இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். பட்லர் 35 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் துடுப்பெடுத்தாட வந்தார். அவருடன் 2 ஆவது விக்கெட்டுக்கு 109 ஓட்டங்கள் சிறந்த இணைப்பாட்டம் அமைத்தார் ஜெய்ஸ்வால். அத்தோடு அதிரடியாக விளையாடி 59 பந்துகளில் சதம் விளாசினார் ஜெய்ஸ்வால்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அவரது இரண்டாவது சதம் இது. இதேவேளை, ஜெய்ஸ்வால் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மறுமுனையில் சஞ்சு சாம்சன் 38 ஓட்டங்கள் எடுத்தார். இந்நிலையில் 18. 4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங்கள் எடுத்து போட்டியை வென்றது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி.

இதன் மூலம் நடப்பு சீசனில் 8 போட்டிகளில் விளையாடி 7 வெற்றிகளுடன் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது ஆர். ஆர். அணி. இந்தப் போட்டியில் 4 ஓவர்கள் வீசி 18 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 5 விக்கெட்களை கைப்பற்றிய ராஜஸ்தான் பந்து வீச்சாளர் சந்தீப் சர்மா ஆட்டநாயகன் விருதை வென்றார். (எ)

# விராட் கோலிக்கு அபராதம் விதிப்பு

டில்லி, ஏப். 24

நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலிக்கு போட்டியின் ஊதியத்திலிருந்து 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

ஐ. பி. எல். தொடரில் கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இதில் 223 ஓட்டங்கள் இலக்கை துரத்திய பெங்களூரு அணி ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் போராடி தோல்வியடைந்தது.

இந்த ஆட்டத்தில் பெங்களூரு அணியின் தொடக்க வீரரான விராட் கோலி, ஹர்ஷித் ராணா வீசிய பந்தை அடித்த நிலையில் அது ஹர்ஷித் ராணாவிடமே சென்று பிடியெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இது தவறான பந்து வீச்சு என்று பெங்களூரு அணி தரப்பில் முறையிடப்பட்டது. ஆனால், இதை ஹவாக் - ஐ தொழில்நுட்பத்துடன் ஆய்வு செய்த 3 ஆவது நடுவர், கோலி ஆட்டமிழந்தார் என அறிவித்தார்.

இதனால் விரக்தியடைந்த கோலி கள நடுவர்களிடம் வாக்குவாதம் செய்தார். அப்போது எந்த முறையில் ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டது என களநடுவர்கள் விளக்கமளித்தனர். இதன் பின்னரே விராட் கோலி களத்திலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில் விராட் கோலி, நடத்தை விதிமுறைகளை மீறியதாக போட்டியின் ஊதியத்தில் 50 சதவீதத்தை அபராதமாக விதித்து ஐ. பி. எல். நிர்வாகம் உத்தரவிட்டது. (எ)



# சாதனை படைத்தார் இந்தியாவின் குகேஷ்

றொரண்டோ, ஏப். 24

கனடாவில் நடந்த செஸ் தொடரில் இந்தியாவின் குகேஷ் 9 புள்ளிகள் பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

உலக சம்பியனுடன் விளையாடவுள்ள வீரரைத் தெரிவு செய்யும் கேண்டிடேட் செஸ் தொடர் கனடாவின் றொரண்டோ நகரில் நடைபெற்றது.

14 சுற்றுக்களைக் கொண்ட இந்தத் தொடரில் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி. குகேஷ் தனது இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் ஹிகாரு நகமுராவுடன் மோதினார்.

இதில் கறுப்பு நிறக் காய்களுடன் விளையாடிய குகேஷ் 71 ஆவது காய் நகர்த்தலின் போது ஆட்டத்தை சமநிலையில் முடித்தார்.

இதன் மூலம் 9 புள்ளிகளுடன் குகேஷ் முதலிடத்தில் இருந்தார். எனினும் அவர் பட்டம் வெல்வது என்பது ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்சி, அமெரிக்காவின் ஃபேபியானோ கருனா ஆகியோர் மோதிய ஆட்டத்தின் முடிவைப் பொறுத்தே இருக்கும் என்ற சூழ்நிலை உருவானது.

ஏனெனில் இவர்களில் யாரேனும் ஒருவர் வெற்றி பெற்றாலும் அவர், 9 புள்ளிகளுடன் முதலிடத்தை குகேஷுடன் பகிர்ந்து கொள்ளக்கூடும்.

இந்த நிலை உருவானால் வெற்றியாளர் யார்? என்பதை தீர்மானிக்க ரைபிரேக்கர் ஆட்டம் நடத்தப்படும்.

இதனால் நெபோம்னியாச்சி, ஃபேபியானோ கருனா ஆட்டம் மிகுந்த பரபரப்பை உருவாக்கியது.




குகேஷ் ஆட்டம் முடிவடைந்த பின்னர் மேற்கொண்டு 15 நிமிடங்கள் வரை நெபோம்னியாச்சி, ஃபேபியானோ கருனா மோதிய ஆட்டம் தொடர்ந்தது. பலமுறை ஃபேபியானோ கருனா வெற்றி பெறும் சூழ்நிலையில் இருந்தார்.

ஆனால், 39 ஆவது காய் நகர்த்தலின் போது அவர், செய்த தவறால் நெபோம்னியாச்சி தனது நிலையை தக்கவைத்தார். இதன் பின்னர் மீண்டும் தனது ஆட்டத்தை கட்டியெழுப்பிய ஃபேபியானோ கருனா வெற்றிக்கு அருகே நெருங்கினார். ஆனால், அதற்குள் நேரம் முடிந்துவிட்டது. முடிவில் ஆட்டம் சமனானது.

இதனால் இந்தியாவின் 17 வயது டி. குகேஷ் 9 புள்ளிகள் பெற்று சம்பியன் பட்டம் வென்றார். கேண்டிடேட்ஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு சுமார் 78. 50 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இதன் மூலம் கேண்டிடேட்ஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற 2 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் குகேஷ். இதற்கு முன்னர் 5 முறை உலக சம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் கடந்த 2014 ஆம் ஆண்டு வெற்றி பெற்றிருந்தார்.

மேலும் 40 ஆண்டுகளுக்குப் பிறகு உலக சம்பியன்ஷிப் பட்டம் வெல்வதற்கான ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ள இளம் வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார் குகேஷ். (எ)

# நீதி கிடைக்கச் செய்வதற்கு தேர்தல் மூலமான ஆணையொன்று தேவையில்லை!



**கலாநிதி ஜெகான் பெரேரா**

சுமார் 300 பேரைப் பலியெடுத்து மேலும் நூற்றுக்கணக்கானவர்களை படுகாயமடையச் செய்த ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு கடந்த ஞாயிற்றுக் கிழமையுடன் (ஏப்ரில் 21 ) சரியாக ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. தற்கொலைக் குண்டுதாரிகள் தங்களது தாக்குதல்களுக்கு கிறிஸ்தவர்களுக்கு புனித தினமான ஈஸ்டர் ஞாயிறன்று கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களை தெரிவுசெய்தனர். தாக்குதல்கள் இடம்பெற்றவேளை தேவாலயங்களுக்குள் அடியார்கள் நிறைந்திருந்தார்கள்.

எதிர்பாராத வகையில் தற்கொலைக் குண்டுதாரிகள் நடத்திய தாக்குதல்கள் உலகளாவிய மோதல்களின் ஒரு களமாக இலங்கை மாறிவிட்டதோ என்ற கேள்வியை எழுப்பியதுடன் மேலும் பல தாக்குதல்கள் இடம்பெறுமோ என்று நிச்சயமற்ற ஒரு நிலைமையையும் ஏற்படுத்தியது. இரு மாதங்களாக தலைநகர் கொழும்பு பெரும்பாலும் மூடப்பட்டுக் கிடந்தது. மக்கள் பீதியுடன் வாழ்ந்தார்கள். குண்டுத் தாக்குதல்கள் தேசிய அரசியலின் போக்கையும் மாற்றியது. தேசியவாத அரசியல்வாதிகள் தேசிய பாதுகாப்பையும் இன, மத பெரும்பான்மை இனத்தவர்களுக்கு உரிய இடத்தையும் உத்தரவாதம் செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.

இன்று அந்த நிகழ்வுகளின் நினைவுகள் பெரும்பாலான மக்களின் உணர்வில் இருந்து மறைந்து வருகிறது. ஆனால், குண்டுத் தாக்குதல்களின் தாக்கம் தொடரவே செய்கிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருவதற்கு அஞ்சியதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவும் தவறான ஆட்சிமுறையும் ஊழலும் சேர்ந்து வங்குரோத்து நிலைக்கு வழி வகுத்தது. அதிலிருந்து நாடு இன்னமும் மீளவில்லை.

குண்டுத் தாக்குதல்களை திட்டமிட்டவர்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலனாய்வுச் சேவைகள் முன்னெச்சரிக்கை செய்தபோதிலும் கூட தாக்குதல்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காதவர்களையும் பொறுப்புக்கூற வைக்கவும் உண்மையைக் கண்டறியவும் முன்வராத காரணத்தால் முன்னைய அரசாங்கத்தினதும் தற்போதைய அரசாங்கத்தினதும் தலைமைத்துவங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டாரக்கள். தவறு செய்தவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு இன்று நாட்டில் பரவலாக காணப்படுகிறது.

குண்டுத் தாக்குதல்களில் இறந்தவர்களை திருநிலைப்படுத்துவதற்கு (அவர்களை புனிதர்களாக அல்லது தியாகிகளாக உயர்த்துவது) நாட்டின் கத்தோலிக்கத் திருச்சபை எடுக்கும் முயற்சி இந்தப் பிரச்சினையை தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தணியவிடாமல் வைத்திருப்பதற்கான ஒரு முயற்சியாகும். இதற்கு பல சர்வதேச முன்னுதாரணங்கள் இருக்கின்றன. 16 ஆம் நூற்றாண்டில் வியட்நாமிய தியாகிகள் அல்லது ஜப்பானிய தியாகிகள் கத்தோலிக்கத் திருச்சபை ஊடாக சர்வதேச பிரல்யத்தைப் பெற்றார்கள்.

வத்திக்கானின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு றோம் நகருக்கு அனுப்புவதற்காக நாடுபூராவும் கத்தோலிக்க சமூகத்திடமிருந்து கையெழுத்துக்களைப் பெறுவதற்கு திருச்சபை முதலில் நடவடிக்கை எடுக்கும் என்று கார்டினல் மல்கம் ரஞ்சித் கூறினார். “குண்டுத் தாக்குதல்களில் பலியானவர்களை “நம்பாக்கையின் நாயகர்களாக” (உநசழநள ழக கயவைா) நாம் பிரகடனம் செய்தவுடன் சர்வதேச சமூகம் அவர்களை அங்கீகரிக்கத் தொடங்கும். விவகாரம் சர்வதேசமயமானதாக மாறும்” என்று அவர் குறிப்பிட்டார்.

குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கான வீதிப் போராட்டங்களாக இருந்தாலென்ன, தேசிய தலைவர்களிடமும் சர்வதேச சமூகத்திடமும் ஆதரவை திரட்டும் நடவடிக்கைகளாக இருந்தாலென்ன கார்டினல் மல்கம் ரஞ்சித் முன்னரங்கத்தில் நின்று அவர்களின் உணர்வுகளுக்காக உறுதியாகக் குரல் கொடுக்கிறார்.

**தகவலை மறைத்துவைத்தல்**

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு வழிவகுத்த தொடர்ச்சியான சம்பவங்கள் குறித்து பல்வேறு உத்தியோகபூர்வ விசாரணைகள் நடத்தப்பட்டன. பாதுகாப்புத் துறையில் சிரேஷ்ட பதவிகளில் இருந்த ஒரு சிலர் சிறைக்குக் கூட செல்லவேண்டிவந்த அதேவேளை, வேறு சிலருக்கு கடமையில் தவறியமைக்காக பெரிய தொகை அபராதமும் விதிக்கப்பட்டது. ஆனால், பல விடயங்கள் மூடிமறைக்கப்படுகிறது என்ற ஒரு உணர்வு இருந்துவந்தது.

நாளடைவில் மூடிமறைப்பு இடம்பெற்றிருப்பதை அம்பலம்படுத்தும் பல சான்றுகள் வெளிவந்தன. உறுதிப் படுத்தக்கூடியவையும் மறைக்கமுடியாதவையுமான புறநிலையான உண்மைகள் இருக்கின்றன. இலங்கை பொலிஸினதும் புலனாய்வுச் சமூகத்தினதும் உறுப்பினர்களின் புலனாய்வு ஆற்றல்களை எண்ணற்ற சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாக இருந்தது. உண்மையில் நடந்தது என்ன என்பதற்கான சான்றுகள் அவர்களிடம் நிச்சயமாக இருந்திருக்கும். அதனால் எந்த நேரத்திலும் உண்மை வெளிச்சத்துக்கு வரலாம்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழு அறிக்கை இரு வாரங்களுக்கு முன்னர்தான் கத்தோலிக்கத் திருச்சபைக்கு வழங்கப்பட்டது. முன்னதாக அவர்களுக்கு அதுவும் நீண்ட தாமதத்துக்கு பிறகு வழங்கப்பட்ட அறிக்கையில் இருந்து 1500 பக்கங்கள் அகற்றப்பட்டிருந்தது.

நீதிக்கான தேடலின் அடுத்த கட்டத்துக்கு புதிய அரசாங்கம் ஒன்று பதவிக்கு வரும்வரை காத்திருக்க வேண்டிய தேவை இருக்கிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கான பாதையைத் தீர்மானிப்பதற்கு மக்களின் ஆணையொன்று தேவைப்படுவது போன்று குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளைக் கண்டறிந்து உறுதி செய்வதற்கான வழியைத் தீர்மானிப்பதற்கு மக்களின் ஆணை எதுவும் தேவையில்லை.




**கத்தோலிக்க திருச்சபையும் வணபிதா சிறில் காமினி பெர்னாண்டோவும் பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றதைப் போன்று முறைமை மாற்றத்துக்கான தேவை ஒன்று இருக்கிறது. நீதிக்கான தேடலுக்கும் தேசிய நல்லிணக்கச் செயன்முறைக்கும் குறுக்கே நிற்கும் முட்டுக்கட்டைகளை அகற்றக்கூடிய தேர்தல் ஒன்றின் ஊடாகவே அந்த மாற்றம் வரவேண்டும்.**



நீதி என்பது அடிப்படையில் நேர்மையானதும் சமத்துவமானதுமான நடத்தையுடன் சம்பந்தப்பட்டது. அது மக்களின் அபிப்பிராயத்திலோ அல்லது தேர்தல் மூலமான ஆணையிலோ அல்ல எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நெறிமுறை நியமங்களிலும் சட்டரீதியான தராதரங்களிலுமே தங்கியிருக்கிறது. உண்மையை வெளிக்கொணர்ந்தால் தங்களுக்கு ஆபத்து என்று சுயநலனுக்காக நினைப்பவர்கள் அரசாங்கத்தில் இருப்பதால் நீதியைக் கிடைக்கச் செய்வதற்கு புதிய அரசாங்கம் ஒன்று தேவைப்படுகிறது.

விசாரணைக்காக குற்றவியல் விசரணை திணைக்களத்திற்கு சென்று வந்த கத்தோலிக்கத் திருச்சபையின் பேச்சாளரான வணபிதா சிறில் காமினி பெர்னாண்டோ, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிக்கொணருவது என்பது அரசியல் முறைமை மாற்றத்திலேயே தங்கியிருக்கிறது என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு பல தடவைகள் சென்று விரிவான வாக்குமூலங்களை கொடுத்ததாகவும் அவர் கூறினார். அவ்வாறு இருந்தபோதிலும் அவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தீர்க்கமான விசாரணைகள் இடம்பெறவில்லை. ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருக்கக்கூடிய சூத்திரதாரிகளை கண்டறிவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் உறுதிப்பாடு குறித்து அவர் சந்தேகம் கிளப்புகிறார். அதன் அடிப்படையிலேயே அவர் அரசியல் முறைமை மாற்றம் தேவை என்று முடிவுக்கு வந்திருக்கிறார்.

**புதிய அரசாங்கம்**

2019 ஈஸ்டர் நிகழ்வுகள் குண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளான தேவாலயங்கள் அமைந்திருக்கும் கொழும்பிலும் மட்டக்களப்பிலும் வாழும் கிறிஸ்தவ சமூகத்தின் நினைவுகளில் கூர்மையாக இருக்கின்றன. அதேவேளை, தேவாலயங்களில் இடம்பெற்ற உயிரிழப்புகளையும் விட மோசமான இழப்புகளும் அழிவுகளும் வேறு கால கட்டங்களில் வேறு பாகங்களில் இடம்பெற்றதை நினைத்துப் பார்க்கவேண்டியதும் அவசியமாகும். நீதிக்கான தேடலில் கிறிஸ்தவர்களும் அவர்களின் தலைமைத்துவமும் உறுதியாக இருக்கிறார்கள் என்றால் அந்த இழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்தவர்களும் நீதிக்கான தங்களது தேடலைக் கைவிடப் போவதில்லை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போர் 2009 மே மாதம் வடக்கு போர்களங்களில் மோசமான அழிவுகளுடனும் விடுதலை புலிகளின் தலைலர்களின் கொலையுடனும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. எத்தகைய சூழ்நிலையில் அது நடைபெற்று முடிந்தது என்பது இன்றுவரை பெரும்பாலான மக்களுக்கு தெரியாது.

2009 மேமாத நிகழ்வுகளில் மாத்திரம் தான் படுகொலைகள் பெருமளவில் இடம்பெற்றன என்றில்லை. அதற்கு இருபது வருடங்களுக்கு முன்னதாக 1989 ஆண்டில் ஜனதா விமுக்தி பெரமுனையும் (ஜே.வி.பி.) தோற்கடிக்கப்பட்டு அதன் தலைவர்களும் கொல்லப்பட்டார்கள். அந்த அனர்த்தத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டார்கள். விடுதலை புலிகளுக்கு நடந்ததைப் போன்றே ஜே.வி.பி. அழித்தொழிக்கப்பட்ட சூழ்நிலையும் வெளியில் தெரியவரவில்லை. அதில் ஒரு பக்கத்தில் மாத்திரமல்ல பல பக்கங்களில் படுகொலைகள் இடம்பெற்றன.

அந்த காலப்பகுதியின் வன்முறைகளின் உயிரிழப்புகள், அழிவுகள், அவலங்கள் குறித்து பல நாவல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் காரணத்தினால் தான் நல்லிணக்கச் செயன்முறையை வலியுறுத்துபவர்கள் உண்மை, பொறுப்புக்கூறல், இழப்பீடு மற்றும் அரசியல் தீர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய நிலைமாறுகால நீதீச் செயன்முறை ஒன்று வேண்டும் என்று தொடர்ச்சியாக குரல் கொடுக்கிற்ர்கள்.

கடந்த வாரம் தேசிய அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் செயலகம் தேசிய நல்லிணக்கச் செயன்முறைகளில் ஈடுபடும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் அரசாங்கப் பொறிமுறைகளுக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது. காணாமல் போனோர் விவகார அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் இடைக்காலச் செயலகம் ஆகியவற்றுடனான கலந்துரையாடல்களில் நேர்மறையான ஈடுபாட்டு உணர்வும் பிரச்சினைத் தீர்வுக்கான உணர்வும் காணப்பட்டது.

உண்மை ஆணைக்குழு சட்டவரைவு ஜே.வி.பி. காலப்பகுதியையும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களையும் இன்னமும் கையாளவில்லை. இது ஒரு குறைபாடாகும்.

கத்தோலிக்க திருச்சபையும் வணபிதா சிறில் காமினி பெர்னாண்டோவும் பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றதைப் போன்று முறைமை மாற்றத்துக்கான தேவை ஒன்று இருக்கிறது. நீதிக்கான தேடலுக்கும் தேசிய நல்லிணக்கச் செயன்முறைக்கும் குறுக்கே நிற்கும் முட்டுக்கட்டைகளை அகற்றக்கூடிய தேர்தல் ஒன்றின் ஊடாகவே அந்த மாற்றம் வரவேண்டும். ●

# மாலைதீவு தேர்தலில் அதிபர் முய்சுவின் சீன ஆதரவுக் கட்சி அபார வெற்றி!

அன்பரசன் எத்திராஜன்



மாலத்தீவு அதிபர் முகமது முய்சுவின் கட்சி அந்நாட்டின் நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் அதிபர் முய்சுவின் அதிகாரம் மேலும் வலுவாகிறது.

மொத்தம் 93 உறுப்பினர்களைக் கொண்ட மாலத்தீவின் மக்களவையில் முய்சுவின் மக்கள் தேசிய காங்கிரஸ் (பி.என்.சி) 66 இடங்களை வென்றதாக முதற்கட்ட முடிவுகள் சொல்கின்றன.

சீனாவுடன் நெருங்கிய உறவைப் பேண முய்சு கடைபிடிக்கும் கொள்கைக்கு இந்த வெற்றி வலுசேர்க்கும் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சீனாவுக்கு ஆதரவானவர் என்று பரவலாகக் கருதப்படும் முய்சு, மாலத்தீவில் இந்தியா நீண்ட காலமாகச் செலுத்திவரும் செல்வாக்கைக் குறைக்க விரும்புகிறார்.

உள்ளூர் ஊடகங்கள் முய்சுவின் கட்சியின் வெற்றியை 'சூப்பர் மெஜாரிட்டி' என்று விவரித்துள்ளன. அரசியலமைப்பைத் திருத்துவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு இடங்களை அக்கட்சி பாராளுமன்றத்தில் எட்டியுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

### 'மாலத்தீவில் அனைத்தையும் கட்டுப்படுத்தும் முய்சு'

பிரதான எதிர்க்கட்சியான மாலத்தீவு ஜனநாயகக் கட்சி (எம்.டி.பி) 15 இடங்களை மட்டுமே கைப்பற்றியிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 21) வாக்கெடுப்புக்கு முன்னர் அது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான இடங்களைக் கொண்டிருந்தது.

மாலத்தீவு ஆய்வாளரும் மேற்கு ஆஸ்திரேலியா பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளருமான அசிம் ஜாஹிர் இதுகுறித்து கூறுகையில், "முய்சுவுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை," என்றார்.

"அரசியல் சார்ந்து பார்த்தால், மாலத்தீவின் அனைத்து அமைப்புகளும் இப்போது முய்சுவின் கட்டுப்பாட்டில் உள்ளன். அவருக்கு மாலத்தீவு நாடாளுமன்றத்தில் போதுமான எண்ணிக்கை இருப்பதால், அவரால் நீதித் துறையையும் கட்டுப்படுத்த முடியும்," என்று ஜாஹிர் கூறுகிறார்.

முய்சு கடந்த ஆண்டு இறுதியில் ஆட்சிக்கு வந்தார். அவரது தேர்தல் பிரசாரம், முந்தைய அரசாங்கத்தால் பின்பற்றப்பட்ட 'இந்தியாவுக்கு முன்னுரிமை' கொள்கையை முடிவுக்குக் கொண்டு வருவதை மையமாகக் கொண்டிருந்தது. அவர் இன்னும் டெல்லிக்கு அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொள்ளவில்லை.

மாலத்தீவில் இந்தியாவின் செல்வாக்கைக் குறைக்க, அங்குள்ள அனைத்து இந்தியப் படைகளையும் திருப்பி அனுப்புவதாக அவர் உறுதியளித்துள்ளார்.




### சீனாவுடனான முய்சுவின் நெருக்கம்

மீட்பு மற்றும் உளவுப் பணிகளுக்காக சில வருடங்களுக்குமுன் இந்தியா மாலத்தீவுக்கு இரண்டு ஹெலிகாப்டர்கள் மற்றும் ஒரு விமானத்தைக் கொடுத்திருந்தது. அவற்றைப் பராமரிக்கவும் இயக்கவும் சுமார் 85 இந்திய ராணுவ வீரர்கள் மாலத்தீவில் தங்கியிருந்தனர்.

மாலத்தீவில் இருந்து இந்திய ராணுவ வீரர்களின் இரண்டு குழுக்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டன. அவர்களுக்குப் பதிலாக அங்கு இந்தியாவின் தொழில்நுட்ப ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள இந்திய துருப்புகள் மே 10-ஆம் தேதி மாலத்தீவை விட்டு வெளியேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய துருப்புகளை திருப்பி அனுப்புவதற்கான முய்சுவின் முடிவு, இந்தியாவுடனான மாலத்தீவின் உறவுகளை மோசமாக்கிவிட்டது. சீனா இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது போல தோன்றுகிறது.

முய்சு கடந்த ஜனவரி மாதம் சீனாவுக்கு அரசு முறைப் பயணமாகச் சென்று முதலீடுகளுக்கான பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.



### 'மாலத்தீவுடனான உறவுகளை இந்தியா பராமரிப்பது முக்கியம்'

சென்ற மார்ச் மாதம் ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கு பயிற்சி அளிப்பது போன்ற 'ராணுவ உதவிகளுக்கான' ஒப்பந்தத்தில் சீனாவுடன் மாலத்தீவு கையெழுத்திட்டது. இந்தியாவும் அமெரிக்காவும் முன்பு மாலத்தீவு ராணுவத்துக்குப் பயிற்சி அளித்து வந்தன.

"இப்போது ஒரு சமநிலையான வெளியுறவுக் கொள்கையை உருவாக்க ஒரு வாய்ப்பு உள்ளது. ஆனால் இந்தியா மாலத்தீவுடனான உறவுகளை நன்றாக நிர்வகிக்காமல், முய்சுவுக்கு உதவ மறுத்தால், அவர் வெளிப்படையாக பெய்ஜிங்கைச் சார்ந்திருப்பார்," என்று ஜாஹிர் கூறுகிறார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலின் முடிவுகள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட இன்னும் ஒரு வாரம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் சுமார் 73 வீத வாக்குகள் பதிவானதாக மாலத்தீவு தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. ஆனால் இது 2019-இல் பதிவான 82 வீத வாக்குகளை விடக் குறைவு.

முதற்கட்டத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து எதிர்க்கட்சியான எம்.டி-பி-யின் மூத்த தலைவர் ஒருவர் முய்சுவுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார்.

"எம்.டி.பி-யின் எம்.பி-க்கள் நமது ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவும், பொறுப்பான எதிர்க்கட்சியாக அரசாங்கத்தைக் கேள்வி கேட்பதற்கும் தயாராக இருப்பார்கள்," என்று அக்கட்சியின் தலைவர் ஃபயாஸ் இஸ்மாயில், எக்ஸ் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

# பிரதமர் நரேந்திர மோடி இஸ்லாமியர்கள் குறித்து என்ன சொன்னார்? சர்ச்சை ஏன்?



இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் கட்சியை கடுமையாக தாக்கிப் பேசியதும், இஸ்லாமியர்கள் குறித்து சொன்ன கருத்தும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

தனது பிரசார உரையில் 'தாய் மற்றும் சகோதரிகளின் தங்கத்தை எடுத்து நாட்டுக்குள் ஊடுருவியவர்களுக்கு விநியோகம் செய்ய' காங்கிரஸ் விரும்புவதாக மோடி கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி தனது உரையில் இஸ்லாமியர்கள் குறித்தும் கருத்து தெரிவித்தார். அதற்கு எதிர்வினையாற்றிய காங்கிரஸ் கட்சி, மோடி 'நாட்டில் வெறுப்பு விதைகளை விதைத்து வருவதாகக்' கூறியுள்ளது.

பிரதமர் மோடியின் உரை முடிந்த சிறிது நேரத்திலேயே, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பர்வன் கேரா ஓர் வீடியோ அறிக்கையை வெளியிட்டார். அதில் மோடிக்கு சவால் விடுத்த அவர், "எங்கள் தேர்தல் அறிக்கையில் இந்து-முஸ்லிம் என்று எங்காவது எழுதப்பட்டிருந்தால், அதைக் காட்டுங்கள்," என்று கூறினார்.

பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகையில், ஒவ்வொரு வீட்டிற்கும் தண்ணீர் மற்றும் எரிவாயு வழங்கிய பிறகு, ஒவ்வொரு வீட்டையும் சூரிய ஆற்றல் இல்லமாக மாற்றுவதே அரசின் நோக்கம் என்றார்.

அடுத்து வரும் 5 ஆண்டுகளில் மக்களுக்கு இலவச ரேஷன் வழங்கப்படும் என்றும், பழங்குடியின குடும்பங்கள், தலித் குடும்பங்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குடும்பங்கள் இதன் மூலம் மிகப்பெரிய பலனைப் பெறுவார்கள் என்றும் மோடி தனது உரையில் கூறினார்.

எல்லைகளைக் காக்கவும், தேவைப்பட்டால் பாதாள உலகத்திற்கும் சென்று எதிரிகளை அழிக்கக் கூடிய வலுவான அரசு நாட்டிற்குத் தேவை என்று மோடி தனது உரையில் கூறினார்.

மேலும் அவர், "கடந்தகால சாதனை இல்லாதவருக்கு இவ்வளவு பெரிய நாட்டைக் கொடுக்க முடியுமா? மோடி இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும். 23 ஆண்டுகள் ஆகின்றன. குஜராத்தில் 13 ஆண்டுகள். துங்கர்பூர்-பன்ஸ்வாரா மக்கள் என்னை நேசத்தோடு பார்க்கிறார்கள்," என்றார்.

### இஸ்லாமியர்கள் குறித்து மோடி என்ன சொன்னார்?

தனது உரையில், மோடி காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை தாக்கிப் பேசினார். நாட்டிலுள்ள பெண்களின் தங்கத்தைக் கணக்கிட்டு அதை விநியோகம் செய்ய காங்கிரஸ் கட்சி விரும்புவதாக கூறினார்.

"பழங்குடியின குடும்பங்களில் இருக்கும் வெள்ளி கணக்கிடப்படும். சகோதரிகளுக்கு சொந்தமான தங்கம், சொத்துக்கள் ஆகியவை அனைவருக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படும். இதில் உங்களுக்குச் சம்மதமா? நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்தைப் பறிமுதல் செய்ய அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்றார்.

மேலும், தனது உரையில், "முன்பு, அவர்களது அரசு ஆட்சியில் இருந்தபோது, நாட்டின் சொத்தில் இஸ்லாமியர்களுக்கு முதல் உரிமை என்று கூறினர். அதாவது சொத்துக்களை வசூலித்த பிறகு, அதை யாருக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்கள்? அதிக குழந்தை பெற்றவர்களுக்கு. நாட்டில் ஊடுருவியவர்களுக்கு சொத்தைப் பகிர்ந்தளிப்பதில் உங்களுக்குச் சம்மதமா?" என்றார்.

"தாய்மார்கள், சகோதரிகள் ஆகியோரிடம் இருக்கும் தங்கத்தைக் கணக்கிட்டு, அதைப் பற்றிய தகவல்களைப் பெற்று, பின்னர் மன்மோகன் சிங் அரசு 'சொத்தில் இஸ்லாமியர்களுக்கு முதல் உரிமை உண்டு' என்று சொன்னதைப்போல பகிர்ந்தளிப்போம் என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கை கூறுகிறது. சகோதர, சகோதரிகளே, இந்த "அர்பன் நக்சல்" எண்ணங்கள் உங்கள் தாலியைக் கூட விட்டு வைக்காது. அவர்கள் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்வார்கள்," என்றார்.

### காங்கிரஸ் கட்சியின் எதிர்வினை என்ன?

மோடியின் இந்தப் பேச்சுக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், பிரதமர் வெறுப்பு விதைகளை விதைத்து வருவதாகவும் தெரிவித்திருக்கிறது.

(மறு பக்கம் பார்க்க)



காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, தனது ‘எக்ஸ்’ பக்கத்தில், “முதல் கட்ட வாக்குப்பதிவில் ஏற்பட்ட ஏமாற்றத்திற்குப் பிறகு, நரேந்திர மோடி பேசும் பொய்களின் தன்மை மிகவும் மோசமடைந்துள்ளது. பயம் காரணமாக அவர் இப்போது பொதுமக்களின் கவனத்தைப் பிரச்னைகளில் இருந்து திசை திருப்ப விரும்புகிறார்,” என்று பதிவிட்டிருக்கிறார்.

“காங்கிரசின் “புரட்சிகரமான தேர்தல் அறிக்கை”க்கு அபரிமிதமான ஆதரவு வரத்துவங்கியுள்ளது. நாடு தனது பிரச்னைகளின் அடிப்படையிலேயே வாக்களிக்கும். வேலைவாய்ப்பு, குடும்பம் மற்றும் எதிர்காலத்திற்காக வாக்களிக்கும். இந்தியா திசைதிரும்பாது,” என்று பதிவிட்டிருந்தார்.

காங்கிரஸ் ஊடகப் பிரிவின் தலைவர் பவன் கேரா சமூக வலைதளங்களில் வீடியோ ஒன்றை வெளியிட்டு, அதில் “நாட்டின் பிரதமர் இன்று மீண்டும் பொய் சொல்லியிருக்கிறார். தேர்தலில் வெற்றி பெற, நீங்கள் பொதுமக்களிடம் பொய் சொல்கிறீர்கள். உங்கள் உத்தரவாதங்கள் பொய், உங்கள் அறிக்கைகள் பொய், உங்கள் வாக்குறுதிகள் பொய்யானவை,” என்று கூறியிருக்கிறார்.

மேலும், “இந்து-முஸ்லிம் என்ற பெயரில் பொய் சொல்லி நாட்டை பிளவுபடுத்துகிறீர்கள். காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் ‘முஸ்லிம்’, ‘இந்து’ என்ற வார்த்தைகள் இருந்தால் எங்களிடம் சொல்லுங்கள். இந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளுங்கள், இல்லையெனில் நீங்கள் பொய் சொல்கிறீர்கள் என்று அர்த்தம்,” என்றார்.

“காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் நீதி குறித்த பேச்சு தான் இருக்கிறது. இளைஞர்களுக்கு நீதி, பெண்களுக்கு நீதி, பழங்குடியினருக்கு நீதி, தொழிலாளர்களுக்கு நீதி என்று பேசப்படுகிறது. அதில் பிரதமருக்கு ஆட்சேபனை இருக்கிறது. ஏன்? எங்கள் தேர்தல் அறிக்கை நீதியை காட்டுகிறது. பிரதமருக்கு இது அவரது கடந்த பத்து வருட செயல்களைக் காட்டுகிறது. கடந்த பத்து ஆண்டுகளாக அவர் ‘இந்து-முஸ்லிம்’ விளையாட்டு மட்டும் தான் செய்திருக்கிறார். அதற்காக அவர் வெட்கப்படவேண்டும்,” என்றார்.

பவன் கேரா மேலும் கூறுகையில், “இப்படி பொய் சொல்லி நாட்டை பிளவுபடுத்துவதற்கு ஒருவர் வெட்கப்பட வேண்டும். பிரதமரே, உங்கள் பொய்களால் மக்கள் எங்களின் தேர்தல் அறிக்கையை படித்துவிட்டு, அதில் ‘இந்து’ என்று எங்கு எழுதப்பட்டிருக்கிறது என்று உங்கள் பொய்களைத் தேடுகிறார்கள். மற்றபடி இது போன்ற வார்த்தைகள் எங்கள் அறிக்கையிலும் இல்லை, எங்கள் மனதிலும் இல்லை, இந்த சமூகத்திலும் இல்லை,” என்றார்.

‘கண்ணியமாக ஓய்வு பெறுங்கள் பிரதமர் அவர்களே’

தனது வீடியோ பதிவில் பவன் கேரா, ”இது உங்க மனநிலையில் மட்டும்தான் இருக்கிறது., பிரதமர் அவர்களே பொய் சொல்வதை நிறுத்துங்கள். இன்னும் ஒன்றரை மாதங்கள் உள்ளன. கண்ணியமாக ஓய்வு பெறுங்கள்,” என்றார்.

“உங்கள் இருக்கையில், உங்களுக்கு முன் படித்தவர்கள் பலர் இந்த நாற்காலியில் அமர்ந்திருக்கிறார்கள். உங்களைப்போல யாரும் பொய் சொன்னதில்லை. உங்களுக்குப் பிறகும் நிறைய நல்லவர்கள் வருவார்கள். யாரும் இப்படிப் பொய் சொல்ல மாட்டார்கள். நீங்கள் சொல்லும் பொய்களால் உங்கள் பெயர் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் சேரும். மன்னிக்கவும், இதுபோன்ற மொழியைக் உங்களிடமிருந்துதான் கற்றுக்கொண்டோம்,” என்றார்.

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் பேரணியில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசுகையில், “நாட்டில் ஜனநாயகம், அரசியல் சாசனம் ஆகியவை அழிந்தால், மக்களுக்கு எதுவும் மிச்சம் இருக்காது. பாபாசாகேப் அம்பேத்கரும், ஜவஹர்லால் நேருவும் அனைத்து மக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை அளித்தனர். சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மரியாதை அளித்தனர். ஆனால் நரேந்திர மோடி ஏழைகளின் உரிமைகளைப் பறிக்க விரும்புகிறார்,” என்றார்.

“இப்போதெல்லாம் நரேந்திர மோடி ‘மக்களுக்காக தான் செய்யும் பணி வெறும் “டிரெய்லர்” என்கிறார். டிரெய்லரிலேயே இவ்வளவு பிரச்னைகள் இருந்தால், ‘படம்’ எப்படி இருக்கும்?” என்று எள்ளலாகக் கூறினார்.

இளைஞர் காங்கிரஸ் தலைவர் சிறினிவாஸ் பி.வி., பிரதமர் மோடியின் உரையின் சில பகுதிகளைப் பகிர்ந்து, “இவர் இந்த நாட்டின் பிரதமராக இருப்பது நாட்டின் துரதிர்ஷ்டம். அதைவிடப் பெரிய சோகம் என்னவென்றால், இந்திய தேர்தல் ஆணையம் நீண்டகாலமாக உயிருடன் இல்லை,” என்று பதிவிட்டிருக்கிறார்.

மேலும் அவர், “தோல்வி பயம் காரணமாக, இந்திய



யப் பிரதமர் வெறுப்பின் விதைகளை வெளிப்படையாக விதைக்கிறார். 18 ஆண்டுகள் முன்பு மன்மோகன் சிங்கின் கூறியதின் ஒரு பகுதியை மட்டும் எடுத்து அதை பொருத்தமற்ற சூழ்நிலையில் பயன்படுத்துகிறார். இதற்குத் தேர்தல் ஆணையமும் பணிந்து செல்கிறது,” என்று பதிவிட்டிருக்கிறார்.

**மன்மோகன் சிங் இஸ்லாமியர்கள் பற்றி என்ன சொன்னார்?**

கடந்த 2006-ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஓர் உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர், “விவசாயம், நீர்ப்பாசனம்-நீர் ஆதாரங்கள், சுகாதாரம், கல்வி, கிராமப்புற உள்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க முதலீடு மற்றும் பொது உள்கட்டமைப்பில் பொது முதலீட்டின் தேவை ஆகியவை நமது கூட்டு முன்னுரிமைகள் என்பது தெளிவாக உள்ளது,” என்று மன்மோகன் சிங் கூறியிருந்தார். “பட்டியல் பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் பிரதானமானவை,” என்றும் அவர் கூறியிருந்தார்.

“பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கு புத்துயிர் அளிக்க வேண்டும். புதிய திட்டங்களை கொண்டு வந்து, சிறுபான்மையினர், குறிப்பாக இஸ்லாமியர்கள், முன்னேற்றம் அடையவும், வளர்ச்சியின் பலன்களைப் பெறவும் அவர்கள் வளங்களில் முதல் பாத்தியதை பெற வேண்டும்,” என்றார்.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், மன்மோகன் சிங் இந்த உரையை ஆங்கிலத்தில் ஆற்றினார். அதில் அவர் “உரிமைகள்“ என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. ஆனால் அவர் ஆங்கிலத்தில் “உடயஅை” (பாத்தியதை) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். இந்த உரை பிரதம மந்திரி அலுவலகத்தின் காப்பகத்தில் உள்ளது.

